
# வானவில்

# VAANAVIL

இதழ் 112 | சித்திரை 2020

ISSUE 112 | APRIL 2020


# எதிர்க்கட்சியினரின் நோக்கம்தான் என்ன?



கொழும்பு ராஜகிரியாவில் உள்ள தேர்தல் ஆணையத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற சர்வ கட்சி கூட்டமொன்றில் பங்குபற்றிய எதிர்க்கட்சியினர் நாடாளுமன்ற பொதுத் தேர்தலை காலவரையறையின்றி ஒத்தி வைக்கும்படி கோரியிருக்கின்றனர். கொரோனா நோய்த் தாக்கம் உலக நாடுகளை மட்டுமின்றி இலங்கையையும் ஆட்டிப்படைத்து வரும் நிலையில் எதிர்க்கட்சியினரின் கோரிக்கை நியாயமானது போலவே பலருக்கும் தோன்றும். அதில் உண்மையும் இல்லாமல் இல்லை.

ஏற்கெனவே பிரதமர் மகிந்த ராஜபக்ச அண்மையில் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியொன்றில், 'எமக்கு தேர்தல் முக்கியமல்ல, கொரோனாவை கட்டுப்படுத்துவதே முக்கியம்' என கூறியிருந்தார். அத்துடன் தேர்தலை நடத்துவதா விடுவதா, அப்படி நடத்துவதாயின் எப்பொழுது நடத்துவது போன்ற விடயங்களை அரசாங்கம் அல்ல, தேர்தல் ஆணையமே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

தேர்தலை காலவரையின்றி ஒத்தி வைக்கும்படி கோரும் எதிர்க்கட்சியினர், அதேநேரத்தில் கலைக்கப்பட்ட பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும்படியும் கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கை அவர்களது தேர்தலைக் காலவரையின்றி ஒத்தி வைக்கும்படி விடுத்த கோரிக்கைக்கு முரணாக உள்ளது.

மறுபக்கத்தில், இந்த விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு வரும்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் மகிந்த விடுத்த அழைப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகள் புறக்கணித்துள்ளன.

அரசியல் சாசனப்படி கலைக்கப்பட்ட பாராளுமன்றத்துக்கான தேர்தலை நடத்தாது காலவரையின்றி ஒத்திவைக்க முடியுமா என்பது தெரியவில்லை. அதேபோல கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட முடியுமா என்பதும் தெரியவில்லை. அதுபற்றிக் கருத்துச் சொல்லும் அளவுக்கு நாம் அரசியல் பண்டிதர்கள் அல்ல. அதுபற்றி அரசியல் சாசன நிபுணர்கள் அல்லது நீதிமன்றம்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

ஆனால் எதிர்க்கட்சியினர் விடுக்கும் கோரிக்கைகளைப் பார்த்தால் கொரோனா தாக்கத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தவும், அதன் மூலம் அரசியல் இலாபம் பெறவும் முயல்கின்றனரோ என்ற சந்தேகம்தான் எழுகின்றது.

*2019* நொவம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சியினருக்கு ஏற்பட்ட படுதோல்வியிலிருந்து அவர்கள் மீள முடியாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தனர். அடுத்து நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலில் எப்படி ஆளும் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறாமல் பார்த்துக் கொள்வது என்பதே அவர்களது போராட்டமாக இருந்தது. இந்த நிலையில்தான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டது.

ஆனால், கொரோனா நோய் இலங்கையையும் தாக்கியதால் குறித்த தேதியில் தேர்தல் நடத்தாது ஒத்தி வைக்கப்பட்டது. தேர்தலை ஒத்தி வைத்தது தேர்தல் ஆணையமே. ஆனால் தேர்தலை ஒத்தி வைத்தது அரசாங்கம்தான் என போலிப் பிரச்சாரத்தை மேற்கொண்ட எதிர்க்கட்சியினர், 'அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதன் மூலம் ஜனாதிபதி ஆட்சியின் மூலம் தனிநபர் சர்வாதிகார ஆட்சியை நடத்த முற்படுகிறது' என கூப்பாடு போட்டனர்.

இந்த நிலையில் கொரோனா நோய் நாடு முழுவதும் வேகமாகப் பரவத் தொடங்கியது. இது எதிர்க்கட்சியினருக்கு உள்ளூர மகிழ்ச்சியை அளித்தது. 'இத்தோடை கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சி சரி' என அவர்கள் குதூகலித்தனர்.


**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**


**நூறு சிந்தனை மலரட்டும்**

# பேரிடர் காலத்தில் ட்ரம்ப் - அமெரிக்காவின் மோதல் போக்கு

**ஐ**க்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமான உலக சுகாதார அமைப்பு, கொரோனா வைரஸ் பாதிப்பு குறித்து சரியான தகவல்களை தெரிவிக்காமல், சீனாவுக்கு ஆதரவாக செயல்பட்டதாகக் குற்றஞ்சாட்டி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அந்த அமைப்புக்கு வழங்கப்படும், 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிறுத்தி வைப்பதாகவும், அதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் கடந்த ஏப்பிரல் 14ந் திகதி அறிவித்துள்ளார். இதற்கு முன்னதாக 2017 இல் ஐ.நாவின் யுனெஸ்கோ (கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) மற்றும் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்தும், 2018 இல் ஐ.நாவின் மனித உரிமைகள் அமைப்பிலிருந்தும் அமெரிக்கா வெளியேறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு, உலக நாடுகளில் ஏற்படும் நோய்த்தொற்று மற்றும் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சனைகளை கண்காணிப்பதற்காக தனி அமைப்பொன்றினை உருவாக்க முடிவு செய்த ஐக்கிய நாடுகள் சபை, 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 இல் உலக சுகாதார அமைப்பினை உருவாக்கியது. முதலில் 61 நாடுகளை மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட உலக சுகாதார அமைப்பு, தற்போது 194 நாடுகளை உறுப்பினர்களாக கொண்டுள்ளது. இதன் தலைமை அலுவலகம், சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்களாக இருக்கும் நாடுகளே உலக சுகாதார அமைப்பிற்கு நிதியுதவியினை வழங்குகின்றன. எனினும் வறிய நாடுகளால் அதிக தொகையை நிதியாக தர முடியாததால், வளர்ச்சியடைந்த நாடுகள் அதிகளவு பங்களிப்பினை வழங்கி வருகின்றன. அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, பிரேசில் போன்ற நாடுகள்தான் தற்போதுவரை உலக சுகாதார அமைப்பிற்கு அதிக நிதியளிக்கும் நாடுகளாக இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல், சில அரசு சார்பற்ற அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் உலக சுகாதார அமைப்பிற்கு நிதி வழங்குகின்றன.

உலக சுகாதார அமைப்பு வெறுமனே ஆலோசனை கூறும் ஓர் அமைப்பு மட்டுமே. இதற்கு அதிகாரம் எதுவும் கிடையாது. உலக மக்களின் ஆரோக்கியத்தை எப்படி மேம்படுத்தலாம், நோய்த் தொற்றுகளை எப்படி தடுக்கலாம் என்று இந்த அமைப்பு பரிந்துரைகளை மட்டுமே செய்ய முடியும். அந்தப் பரிந்துரைகளை இந்த அமைப்பு உலகிலுள்ள எந்தவொரு நாட்டிலும் அமுல் செய்ய முடியாது. உலக சுகாதார அமைப்பின் நிதியில் கிட்டத்தட்ட 15% அமெரிக்காவினது பங்களிப்பு. இந்த 15% இழப்பதென்பது அமைப்பை ஓரளவு பாதிக்கத்தான் செய்யும்.

உலகிலேயே மிக மோசமாக கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாடு அமெரிக்காதான். அமெரிக்காவில் இவ்வாறு தீவிரமாக கொரோனா பரவ சீனாதான் காரணம் என்று ட்ரம்ப் திரும்பத்திரும்ப தெரிவித்து வருகிறார். அதேபோல் உலக சுகாதார அமைப்பு கொரோனா தொற்று பற்றி உலகிற்கு போதிய எச்சரிக்கைகளை விடுக்கத் தவறியதாகவும் சீனா சார்பாக நடந்து கொள்வதாகவும் ட்ரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார். ஆனால் ட்ரம்ப் தன்னுடைய சொந்தத் தவறுகளை மறைக்கவே இப்படி செய்கிறார் என்ற விமர்சனங்களும் அமெரிக்காவிற்கு உள்ளேயும் வெளியேயும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. கொரோனாவிற்கு எதிரான அவரின் தோல்வியை சமாளிக்கவே ட்ரம்ப் இப்படி பழிகளை பிறர் மீது போடுகிறார் என்பது மறுக்க முடியாத உண்மையே.

இந்த நிலையில் இந்த விமர்சனங்களுக்கு வலுவூட்டும் விதமாக தற்போது முக்கியமான செய்தி ஒன்று வெளியாகி உள்ளது. அதன்படி கொரோனா வைரஸ் அமெரிக்காவிற்கு வரும் முன்பே, அது தொடர்பாக 12 முறை அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு சி.ஐ.ஏ எச்சரிக்கை விடுத்துள்ளதாம். அதன்படி கடந்த டிசம்பர் மாதம் இறுதியிலேயே கொரோனா தொடர்பான முதல் எச்சரிக்கையை சி.ஐ.ஏ ட்ரம்பிற்கு அனுப்பி உள்ளது. ஆனால் அவர் இதன் மீது எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பெப்ரவரி இறுதி வரை இந்த கொரோனா குறித்து ட்ரம்ப் எதுவும் அலட்டிக் கொள்ளவே இல்லை. இக்காலகட்டத்திலேயே ஈரான் இராணுவத்தளபதி சுலைமானியைக் கொன்று, அதன் பின்னர் எழுந்த பதட்ட நிலைமைகளைச் சமாளிப்பதிலும் இந்தியாவிற்கான விஜயத்திலும் அவரது முழுக்கவனமும் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

உலகளவில் புகழ்பெற்ற தி லேன்செட் (THE LANCET) எனும் மருத்துவ இதழின் பிரதம ஆசிரியர் ரிட்சார்ட் ஹோர்டன் (Richard Horton) அண்மையில் சீன ஊடகக் குழுமத்துக்கு அளித்த சிறப்புப் பேட்டியொன்றில், 'இந்த நோய் தொற்றைச் சமாளிப்பதில் சீனாவின் பல நடவடிக்கைகள் உலகம் கற்றுக் கொள்ளத்தக்கவை. எடுத்துக்காட்டாக, தற்காலிக மருத்துவமனை, சீனாவின் வெற்றிகரமான நடவடிக்கைகளில் முக்கியத்துவம் மற்றும் புதுமை வாய்ந்த ஒன்று' என்று கூறியுள்ளார்.

'வைரஸ் தோற்றம் பற்றி அணுகும் போது, அறிவியல் பூர்வமான மனப்பான்மையுடன் அதனை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், போலியான தகவல் மற்றும் பொய்க் கூற்றுகளால் ஏற்படும் பாதிப்பு பெரும்பாலும் வைரஸ் பரவலால் ஏற்படும் பாதிப்புக்குச் சமமாக இருக்கும். அமெரிக்காவின் அறிவியல் மற்றும் மருத்துவத் துறையின் வளர்ச்சி நிலை பாராட்டத்தக்கது என்றபோதிலும், அந்நாட்டின் அரசியல்வாதிகளின் செயல்பாடு வருத்தம் அளிப்பதாக உள்ளது. வைரஸ் தோற்றம் பற்றி அவர்கள் சதித் திட்டத்தை உருவாக்கி பரப்புகின்றனர். ஆதாரம் இல்லாத சிகிச்சை முறைகளை ஆதரிக்கின்றனர். இதர நாடுகளையும் அமைப்புகளையும் அவர்கள் வெளிப்படையாகக் குறைகூறி வருகின்றனர். இத்தகைய செயல்களால் எந்த பயனும் இல்லை. நாம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலம் மட்டுமே நோய் தொற்றால் ஏற்படும் அறைகூவல்களைச் சமாளிக்க முடியும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாவை உலகம் முழுவதும் எதிர்கொள்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த இற்றைவரை சிகிச்சைகளோ மருந்துகளோ இல்லாத நிலையில், அரசியல் புரிவதை விடுத்து, உலக சுகாதார அமைப்புடனும் சீனாவுடனும் மோதல் போக்கினைத் தவிர்த்து, அறிவியல் தளத்தில் செயலாற்ற அமெரிக்கா முன்வர வேண்டும்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**


**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


**– ஆசிரியர் குழு**

# சுதந்திரமாக பாடுவதற்கான உரிமையை நசுக்கும் துருக்கி அரசு

ஏப்ரல் 24ந் திகதி 'யோரூம்' (Grup Yorum) இசைக்குழுவின் கலைஞரரன 28 வயதுடைய முஸ்தபா கோசெக் (Mustafa Koçak) உண்ணாவிரதப் போராட்டத்தில் இரண்டாவது நபராக உயிரிழந்திருக்கிறார். சிறையிலுள்ள சகாக்களுடன் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கிய இவரது உண்ணாவிரதப் போராட்டம், 297 நாட்கள் நீடித்தும் துருக்கியின் ரெசெப் தயிப் ஏர்டோகன் (Recep Tayyip Erdoğan) அரசாங்கத்தின் மனக் கதவுகளைத் திறக்கவேயில்லை.

'யோரூம்' துருக்கியைச் சேர்ந்த ஓர் இசைக்குழு. இந்தக்குழுவினர் அரசியல் பாடல்களை இயற்றுவதில் பெயர் போனவர்கள். Grup Yorum (Yorum என்றால் துருக்கி மொழியில் விளக்கம் அல்லது கருத்து என்று பொருள்) 1985 முதல் இருபத்தி மூன்று இசைத்தட்டுகளையும் ஒரு திரைப்படத்தையும் வெளியிட்டுள்ளது. குழுவின் சில இசை நிகழ்ச்சிகளும் மற்றும் இசைத்தட்டுகளும் கடந்தகாலங்களில் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் இக்குழு உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டும், சிறையில் அடைக்கப்பட்டும், சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் வருகின்றனர். அப்படியிருந்தும் இந்த இசைக்குழு இன்னமும் பிரபல்யமாகவும் அவர்களின் இசைத்தட்டுகள் துருக்கி மற்றும் சர்வதேச அளவில் தொடர்ந்து விற்பனையாகியும் வருகின்றன. ஜெர்மனி, ஆஸ்திரியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம், டென்மார்க், பிரித்தானியா, கிரீஸ் மற்றும் சிரியா ஆகிய நாடுகளிலும் 'யோரூம்' குழு தமது இசை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளனர்.

இக்குழு, துருக்கிய மற்றும் குர்திஸ்தான் நாட்டுப்புற இசையை, இடதுசாரி அரசியல் கண்ணோட்டத்துடனும், முதலாளித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முற்போக்கான பாடல்களை உருவாக்கியும் வந்தது. அவர்களின் பாடல்கள் இளைஞர்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்த தொடங்கியதுடன், ஏழைகளை ஒடுக்கும் துருக்கிய அரசாங்கத்தின் கொள்கையை விமர்சிப்பதற்றேற வகையில் அவர்களின் பாடல்கள் இருந்ததால், துருக்கி அரசாங்கத்திற்கு தலைவலியை கொடுத்தன.




அதன் உச்சக்கட்டம்தான் அந்தக் குழுவை சேர்ந்த ஐவரை கடந்தாண்டு சிறைபிடித்தது. கடந்த ஏப்ரல் 3ந் திகதி, இந்தக் குழுவைச் சேர்ந்த 28 வயதுடைய பெண்மணி ஹெலின் பெலெக் (Helin Bölek), இவர்களை விடுவிக்கக்கோரி சிறைக்குள்ளும் பின்னர் சிறைக்கு வெளியேயும் நடாத்திய தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் முதலாவதாகப் பலியானார். இவரது மரணத்தையொட்டி மலேசியாவின் 'சோசலிஸ்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் கீழேயுள்ளது.

---

### துருக்கி : 288 நாள் உண்ணாவிரதப் போராட்டம், இடதுசாரி பாடகி மரணம்

ஹெலின் பெலெக், துருக்கியைச் சார்ந்த, இடதுசாரி கொள்கை கொண்ட ஓர் இசைக்கலைஞர், கடந்த ஏப்ரல் 3–ம் தேதி, 288 நாள் உண்ணா விரதத்தின் இறுதியில் மரணித்துப் போனார். சுதந்திரமாகப் பாடுவதற்கு உரிமை வேண்டும் எனும் போராட்டத்தில், அந்த 28 வயது இளம்பெண் கொல்லப்பட்டார், துருக்கியின் ரெசெப் தயிப் ஏர்டோகன் அரசாங்கத்தின் கொடுங்கோன்மைக்கு சமீபத்தியப் பலி அவர்தான்.

துருக்கியில் பிரபலமான இடதுசாரி இசைக் குழுவான "யோரூம் குரூப்" எனும் குழுவின் உறுப்பினராக ஹெலின் பெலெக் இருந்தார். 1985–ம் ஆண்டு நிறுவப்பட்ட இக்குழு, இலத்தீன் அமெரிக்க "புதிய பாடல்" இயக்கத்தால் (நியூவா கேன்சியன்) ஈர்க்கப்பட்டது. இந்தக் குழு துருக்கிய மற்றும் குர்திஸ்தான் நாட்டுப்புற இசையை, ஓர் இடதுசாரி அரசியல் கண்ணோட்டத்துடன் இணைத்து, முதலாளித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முற்போக்கான பாடல்களை உருவாக்குவதற்கும், ஏழைகளை ஒடுக்கும் துருக்கிய அரசாங்கத்தின் கொள்கையை விமர்சிப்பதற்கும் பாடல்களை உருவாக்கி வந்தது.

துருக்கிய அரசாங்கம், யோரூம் குழுமத்தைப் பல ஆண்டுகளாக தொடர்ந்து துன்புறுத்துவதை எதிர்த்து, ஜூன் 2019–ல், யோரூம் குழுமத்தின் மற்ற நான்கு உறுப்பினர்களுடன் ஹெலின் பெலெக் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

அப்போது அந்த ஐந்து இசைக்கலைஞர்களும் சிறையில் இருந்தனர்.

அந்த அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்தின் உரிமைகோரல்கள் பின்வருமாறு:

ஐடில் (IDIL) கலாச்சார மையத்தின் மீதான சோதனைகளை நிறுத்துங்கள் (ஐடில் குல்தூர் மெர்கேஜி – இஸ்தான்பூல், ஓக்மெய்டானா பகுதியில் அமைந்துள்ள, 'யோரூம்' குழுமத்தின் உறுப்பினர்களால் நடத்தப்படும் கலாச்சார மையம்)

யோரூம் குழுமம் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தடையை நீக்குதல், தடுத்து வைக்கப்பட்டுள்ள இசைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் விடுவிக்கவும், இசைக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் மீதான கைது வாரண்டை இரத்துசெய் யோரூம் குழுமத்தின் உறுப்பினர்கள் மீதான வழக்கை இரத்து செய்.

உண்ணாவிரதத்தில் ஒரு சிறு வெற்றியைக் குறிக்கும் வகையில், யோரும் குழுமத்தின் உறுப்பினர்களாக இருந்த ஹெலின் பெலெக் மற்றும் பஹார் கர்ட் ஆகியோர் 2019 நவம்பரில் விடுவிக்கப்பட்டனர். இருப்பினும், தடுத்து வைக்கப்பட்டுள்ள யோரூம் இசைக் குழுவின் மற்ற உறுப்பினர்களை விடுவிக்கவும், யோரூம் குழுமம் இசை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான தடையை இரத்து செய்யவும் கோரி ஹெலின் பெலெக் மற்றும் பஹார் கர்ட் இருவரும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர். தடுத்து வைக்கப்பட்டிருந்த இன்னொரு இசைக்கலைஞரான இப்ராஹிம் கோக்செக் (Ibrahim Gökçek), இவ்வாண்டு, பிப்ரவரி 25–ம் தேதி விடுவிக்கப்பட்டார், ஆனால் அவரும் தனது உண்ணா விரதத்தைக் கைவிடவில்லை.

*2020*, மார்ச் *11*, இரவு, ஹெலின் மற்றும் இப்ராஹிம் ஆகியோர் உண்ணாவிரதம் இருந்த "எதிர்ப்பு வீடு", ஸ்வாட் சிறப்புப் போலிஸ் படையினராலும் அரசியல் போலீஸ் முகவர்களாலும் சோதனை செய்யப்பட்டது. இருவரும் போலிசாரால் கடத்தப்பட்டு, கிழக்கு இஸ்தான்புல், உம்ரானியே மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். துருக்கிய உள்துறை அமைச்சு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இஸ்தான்புல் மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததன் அடிப்படையில், இருவரையும் உம்ரானியே மருத்துவமனை ஒரு வாரம் தடுத்து வைத்து, வலுக்கட்டாயமாக "சிகிச்சை" செய்தது.

கட்டாய "மருத்துவ சிகிச்சை" என்பது, கட்டாயமாக உணவளிப்பதையும் உள்ளடக்கியது, உண்ணாவிரதத்தால் சோர்ந்து போனவர்களின் ஆரோக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் ஆபத்தை விளைவிக்கும் ஒரு செயல். மாவட்ட நீதிமன்றத்தின் முந்தையத் தீர்ப்பை, மேல்முறையீட்டு நீதிமன்றம் இரத்து செய்ததனால், இருவரும் ஒரு வாரம் கழித்து விடுவிக்கப்பட்டனர்.

*2020*, ஏப்ரல் *3*, "எதிர்ப்பு வீட்டில்" தனது இறுதி மூச்சு நிற்கும் வரை, ஹெலின் பெலெக் தனது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார்.

*2020*, ஏப்ரல் *4*–ம் தேதி, ஹெலின் பெலெக் இறுதிச் சடங்கு அணிவகுப்பில் பலர் கலந்துகொண்டனர், ஆனால் துருக்கிய காவல்துறையினர் அந்த அணிவகுப்பைத் தடுத்துள்ளனர். போலீசார் அணிவகுப்பில் கலந்துகொண்டவர்களைத் தாக்கியதோடு, அவர்கள் மீது சோதனை நடத்தி பலரைக் கைது செய்தனர். ஹெலின் உடலைக் கைப்பற்றி, போலிசாரே கல்லறைக்குக் கொண்டு சென்றனர்.

## யார் இந்த ஹெலின் பெலெக்?

மேற்கு துருக்கியில் அமைந்துள்ள தனது சொந்த ஊரான 'சானக்காலே'யில், இலவசக் கல்விக்கான இளைஞர் போராட்டத்தில் சேர்ந்து, ஹெலின் பெலெக் இடதுசாரி அரசியல் செயல்பாட்டில் ஈடுபடத் தொடங்கினார். பின்னர் அவர், யோரூம் குழுமப் பாடகர்களால் பயிற்சியளிக்கப்பட்ட இளம் பாடகர்களில் ஒருவரானார். *2014* கோடையில், ஹெலின் பெலெக், துருக்கியைச் சேர்ந்த மற்ற இடதுசாரி ஆர்வலர்களுடன், இஸ்ரேலிய சியோனிச ஆட்சிக்கு எதிரான பாலஸ்தீனியப் போராட்டத்தை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட "மனித கேடயம்" பிரச்சாரத்தில் பங்கேற்றார்.

*2016*–ல், ஹெலின் பெலெக் அதிகாரப்பூர்வமாக யோரும் குழுமத்தில் சேர்ந்து, இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தொடங்கினார்.

ஹெலின் யோரூம் குழுமத்தில் சேர்ந்த சிறிது காலத்திலேயே, *2016* நவம்பரில் எடில் கலாச்சார மையத்தில் சோதனை நடத்திய போலிஸ் நடவடிக்கையின் போது அவர் முதல்முறையாக கைது செய்யப்பட்டார். அதன் பின்னர், ஹெலின் பெலெக் பல முறை கைது செய்யப்பட்டார்.

துருக்கியில், இடதுசாரிக் கொள்கை கொண்ட யோரூம் குழுமம் ஏழைகளின் விடுதலைக்காகப் போராடியதால், அதிகாரிகளால் துன்புறுத்தல் மற்றும் அடக்குமுறைக்கு இலக்காகியது.

நேட்டோ எதிர்ப்பு மார்க்சிச–லெனினிச போராளிக்குழுவான "புரட்சிகர மக்கள் விடுதலை முன்னணி" (Revolutionary People's Liberation Party-Front, அல்லது DHKP/C) உடன் இணைந்து செயலாற்றுவதாகவும் துருக்கி அரசாங்கம் ஒரு மேற்கு ஏகாதிபத்திய கைப்பாவை என்று கருதுவதாகவும் அரசாங்கம் பலமுறை யோரூம் குழுவினர் மீது குற்றம் சாட்டியதோடு, அவர்களைப் பயங்கரவாதக் குழு என்றும் துருக்கி அரசாங்கம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன முத்திரை குத்தின.

துருக்கிய அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட டி.எச்.கே.பி–சி (DHKP/C) உட்பட, எந்த இடதுசாரி அரசியல் குழுவுடனும் யோரூம் குழு ஒருபோதும் இணைந்து செயலாற்றவில்லை. இருந்தபோதிலும், துருக்கி அரசாங்கம், குறிப்பாக எர்டோகனின் ஆட்சியில் இருந்தபோது, யோரூம் குழுமத்தின் மீதான அரசியல் அடக்குமுறையை நிறுத்த முடியவில்லை. யோரூம் குழுமத்தின் பல உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு, மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். யோரூம் குழு வெளியிட்ட இசை ஆல்பங்கள் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன, அவற்றின் இசை நிகழ்ச்சிகள் தடை செய்யப்பட்டுள்ளன. ஆயினும்,

யோரூம் குழுவினரின் ஆல்பம், துருக்கிய வரலாற்றில் சிறந்த விற்பனையான ஆல்பங்களில் ஒன்றாகும், மேலும் அதன் இசை நிகழ்ச்சிகளில் பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் கலந்துகொள்கிறார்கள்.

*2016*–ம் ஆண்டு முதல், நாட்டில், திறந்தவெளி நிகழ்ச்சிகளை நடத்த துருக்கி அரசாங்கத்தால் யோரூம் குழுமத்திற்குத் தடை விதிக்கப்பட்டது.

ஹெலின் பெலெக் தனது இளமை காலத்தை, அவரது குறுகிய

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...**

# தமிழ் தலைமைகள் யாருடைய பிரதிநிதிகள்?

இலங்கைத் தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியான ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரசும் சரி, பின்னர் அதிலிருந்து பிரிந்து எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தொடங்கப்பட்ட தமிழரசுக் கட்சியும் சரி, அன்றிலிருந்து இன்றுவரை ஏகாதிபத்திய சார்பானவர்களாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் நண்பர்களாகவுமே செயற்பட்டு வருகின்றனர்.

இவர்கள் ஒருபோதும் தமிழ் மக்களின் இயல்பான நண்பர்களான இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டது கிடையாது. அதுமட்டுமல்லாமல், தென்னிலங்கையின் இன்னொரு முதலாளித்துவக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்ததும் கிடையாது.

அதேபோல இந்தத் தமிழ் கட்சிகள் உலகில் உள்ள சோசலிச நாடுகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகள் என்பனவற்றுடனும் உறவு வைத்தது கிடையாது. அதுமட்டுமின்றி தமது மக்களின் விடுதலைக்காகப் போராடிய உண்மையான விடுதலை இயக்கங்களை ஆதரித்ததும் கிடையாது. இவர்கள் ஆதரிப்பதெல்லாம் உலக ஏகாதிபத்தியங்களான அமெரிக்கா, பிரித்தானியா போன்றவற்றைத்தான்.

மறுபக்கத்தில், இந்திய சுதந்திரத்துக்காகப் போராடியதில் முக்கிய பாத்திரம் வகித்த காங்கிரஸ் கட்சி, பிற்காலத்தில் பெரும் முதலாளிகளினதும் நிலப்பிரபுக்களினதும் கட்சியாக மாறிய போதும், அது பாலஸ்தீன மக்களின், கியூப மக்களின், வியட்நாம் மக்களின், தென்னாபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டங்களை ஆதரித்திருக்கிறது. இனவாதம், மதவாதம் என்பனவற்றை எதிர்த்து வந்திருக்கிறது.

இங்குதான் இலங்கை தமிழ் தலைமைகள் எந்த வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகள் என்ற கேள்வி எழுகிறது.

சிங்கள மக்களை எடுத்துக்கொண்டால் ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே ஒரேயொரு முதலாளித்துவக் கட்சியாக இருந்தது. ஆனால் அந்தக் கட்சி சிங்கள தேசிய முதலாளித்துவத்தின் அரசியல் பிரதிநிதியாக இருக்கவில்லை. அதற்கு காரணம் அப்பொழுது இலங்கையில் அரச – தனியார் தொழிற்துறைகள் எல்லாமே இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியர் வசம் இருந்தது. இலங்கையர்களின் சுதேச தொழில் முயற்சிகள் ஆரம்ப நிலையிலேயே இருந்தன. அதனால் ஐ.தே.க. அந்நிய முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்கின்ற, அவர்களுக்குத் தரகு வேலை செய்கின்ற கட்சியாக இருந்தது. அதனால்தான்



ஐ.தே.கவை ஏகாதிபத்திய சார்பு தரகு முதலாளித்துவக் கட்சி என அழைக்கிறோம். இன்றுவரை அதன் வர்க்க – அரசியல் நிலைப்பாடு அதுதான்.

## கே.மாணிக்கவாசகர்

1948இல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையின் தேசிய முதலாளித்துவம் ஓரளவு வளரத் தொடங்கியது. ஆனால் அதன் வளர்ச்சிக்கு பிரித்தானிய முதலீடுகள் மற்றும் வர்த்தகம் என்பன இடையூறாக இருந்தன. ஆனால் அந்தத் தடைகளை நீக்க விதேசிய சார்பு ஐ.தே.க. அரசு தயாராக இருக்கவில்லை. அதன் காரணமாகவே ஐ.தே.கவிலும் அதன் அரசிலும் அங்கம் வகித்துக் கொண்டிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, அவற்றிலிருந்து வெளியேறி 1951இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.

பண்டாரநாயக்கவின் வெளியேற்றம் ஐ.தே.கவின் உடைவு மட்டுமல்ல. அது இலங்கை முதலாளி வர்க்கத்தின் உடைவுமாகும். அதாவது, ஐ.தே.க. பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கையின் தரகு முதலாளி வர்க்கத்துக்கு எதிராக தேசிய முதலாளி வர்க்கம் தோன்றி விட்டதின் அறிகுறியுமாகும். அந்த தேசிய முதலாளி வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதியாகவே சிறீலங்கா சுதந்திரக் கட்சி உருவானது. சுதந்திரக் கட்சி தேசிய முதலாளிகளின் பிரதிநிதியாக மட்டுமின்றி, தொழிலாளர்கள், விவாயிகள், மத்தியதர வர்க்கத்தினர், சிறிய கைவினைஞர்கள் ஆகியோரின் பிரதிநிதியாகவும் இருந்தது. (இதன் காரணமாகவே பிற்காலத்தில் இடதுசாரிக் கட்சிகள் பலமிழக்கவும், சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரவும் வேண்டிய நிலை ஏற்பட்டது)

இதன் காரணமாவே அந்தக் கட்சி குறுகிய காலத்தில் – 1956இல் மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு இலங்கை தேசிய முதலாளி வர்க்கத்தினதும், மக்களினதும் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த அந்நியரின் தொழிற்துறைகள் எல்லாவற்றையும் தேசியமயமாக்கியது.

இந்தப் பகைப்புலத்தில் தமிழ் கட்சிகளின் நிலையை எடுத்துப் பார்ப்போம்.

தமிழர்களின் முதல் அரசியல் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆரம்பம் முதலே ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறது. அதுமட்டுமின்றி, அக்கட்சி 1948இல் டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசிலும் சேர்ந்து கொண்டது. அந்தக் காலகட்டத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சி ஐ.தேகவின் தமிழ் கிளையாகவே செயல்பட்டது எனலாம். அந்த வகையில் தமிழ் காங்கிரஸ் கட்சியும் ஒரு தரகு முதலாளித்துவக் கட்சியே.

ஐ.தே.க. அரசாங்கம் அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் 'இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம்' என்ற பெயரில் 1948இல் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து மலையக இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் பிராஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்த போது அந்தச் சட்டத்தை தமிழ் காங்கிரஸ் கட்சி ஆதரித்து வாக்களித்து மலையக மக்களுக்குத் துரோகமிழைத்தது. அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியிலிருந்து தனது ஆதரவாளர்களுடன் விலகிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், 1949இல் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்.

தமிழ் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட இந்த உடைவை இடதுசாரிகளில் சிலர் ஐ.தே.கவிலிருந்து வெளியேறி பண்டாரநாயக்க சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய நிகழ்வுடன் ஒப்பு நோக்கினர். இது ஒரு முற்போக்கான நிகழ்வு எனக் கருதிய அவர்கள், தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான தமிழரசுக் கட்சியின் சில செயற்பாடுகளுக்கு ஆதரவும் அளித்தனர். ஆனால் இந்த உடைவு தென்னிலங்கையில் ஏற்பட்டது போன்ற முதலாளித்துவ வர்க்கத்தில் ஏற்பட்ட உடைவு போன்றதல்ல என்பதை அவர்கள் பார்க்கத் தவறிவிட்டனர்.

ஐ.தே.க. அரசின் பிரஜாவுரிமைச் சட்டத்தை தமிழ் காங்கிரஸ் கட்சி ஆதரித்ததின் காரணமாகவே அதிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தாக செல்வநாயகமும் அவரது ஆதரவாளர்களும் பிற்காலத்தில் சொல்லிக் கொண்டாலும், அந்த சட்டத்தை காங்கிரஸ் கட்சி ஆதரித்த நேரத்தில் செல்வநாயகமும் குழுவினரும்

அந்தக் கட்சியிலேயே இருந்தனர். அதுமட்டுமின்றி, கட்சித் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அதை ஆதரித்ததிற்காக செல்வநாயகம் குழுவினர் உடனடியாக கட்சியை விட்டு வெளியேறவும் இல்லை. ஒரு வருடம் கழித்து 1949இல் தான் வெளியேறி தமிழரசுக் கட்சியை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சட்ட மூலத்தை ஆதரித்ததைத் தவிர, தமிழ் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறியதற்கு செல்வநாயகம் குழுவினர் வேறு காரணம் எதையும் தெரிவிக்கவும் இல்லை. டி.எஸ்.சேனநாயக்கவின் அரசாங்கம்தான் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்த போதிலும் செல்வநாயகம் குழுவினர் அதை எதிர்த்ததிற்கு ஆதாரங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமன்று. ஐ.தே.க. ஒரு ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு தரகு முதலாளித்துவக் கட்சி, அதில் பொன்னம்பலம் இணைந்திருப்பது தவறு என்பதற்காகவும் செல்வநாயகம் அவரை நிராகரித்துவிட்டு வெளியேறவில்லை. ஏனெனில், 1965இல் டி.எஸ்.சேனநாயக்கவின் மகன் டட்லி சேனநாயக்கவின் தலைமையில் ஐ.தே.க. அரசாங்கம் அமைந்த போது, அதில் பொன்னம்பலத்தின் காங்கிரஸ் கட்சியும், செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சியும், தீவிர சிங்கள இனவாதிகளான கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து கொண்டனர்.

எனவே, தமிழ் காங்கிரஸ் போன்று தமிழரசுக் கட்சியும் ஐ.தே.கவின் கிளையாக, தரகு முதலாளித்துவக் கட்சியாக மாறியது என்பதே உண்மை. இரண்டு கட்சிகளுக்கும் வர்க்க மற்றும் அரசியல் அடிப்படையில் எந்த வித்தியாசமும் இல்லை. அதை நிரூபிப்பது போல முதன்முதலாக 'தமிழீழ' தீர்மானத்தை எடுத்த 1976 வட்டுக்கோட்டை மாநாட்டின் போது இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைந்து தமது பெயரை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என மாற்றிக் கொண்டன.

தமிழரசுக் கட்சி தமிழில் தனியரசைக் குறிக்குமுகமாக 'தமிழரசு கட்சி' எனப் பெயர் வைத்திருந்தாலும், ஆங்கிலத்தில் தனது பெயரை சமஸ்டிக் கட்சி என்றே நீண்ட காலம் பயன்படுத்தி வந்தது. 1976அல் வட்டுக்கோட்டையில் நடத்திய மாநாட்டிலேயே 'தமிழ் ஈழம்' என்ற தனியரசுத் தீர்மானத்தை எடுத்தது.

தமிழர்களுக்கென்று தனியான அரசு ஒன்றை அமைப்பதற்கான தீர்மானம் புற – அக சூழ்நிலைகளை அடிப்படையாக முன்வைத்து மேற்கொள்ளப்பட்டதல்ல. ஏனெனில் எல்லா நாடுகளினதும் வரலாற்றை எடுத்து நோக்கினால் ஒரு இனத்தின் தேசிய முதலாளித்துவ வர்க்கமே எப்பொழுதும் தனியரசுக்கான கோரிக்கையை எழுப்பி வந்திருப்பதைக் காணலாம். அப்படி அந்த முதலாளி வர்க்கம் தனியரசுக் கோரிக்கையை எழுப்புவதற்குக் காரணம் பொருளாதாரப் போட்டியே.

நாட்டின் அதிகாரத்தை வைத்திருக்கும் ஒடுக்குகின்ற பெரிய இனத்தின் முதலாளித்துவ வர்க்கம் ஒடுக்கப்படுகின்ற சிறிய இனத்தின் தேசிய முதலாளி வர்க்கம் வளர்வதற்கான சூழ்நிலைகளை மறுக்கும் போது அந்த முதலாளி வர்க்கம் அரசியல் ரீதியாகப் பிரிந்துபோய் தனியரசு அமைப்பதற்கான கோரிக்கையை முன்வைக்கிறது. இதன் நோக்கம் தனது பொருளாதாரத்தை தங்கு தடையின்றி வளர்க்கவும், தனது இனத்தின் மத்தியில் இடையூறற்ற சந்தையை உருவாக்கி தனது மக்களை ஏகபோகமாகச் சுரண்டவும் வழி ஏற்படும் என்பதற்காகவே. தம்மை தமது இனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கம் சுரண்டும் எனத் தெரிந்திருந்தாலும், பெரிய இனத்தின் முதலாளித்துவ வர்க்கம் சிறிய இனத்தின் மீது மேற்கொள்கின்ற ஒட்டுமொத்த இன ஒடுக்குமுறை காரணமாக அந்த இனத்தின் அனைத்து மக்கள் பிரிவினரும் தமது முதலாளித்துவ வர்க்கம் முன்வைக்கும் தனியரசுக்கான கோரிக்கையை ஆதரிக்கின்றனர்.

இலங்கையில் சிங்கள முதலாளித்துவ வர்க்கம் ஏனைய இனங்கள் மீது மேற்கொள்கின்ற தேசிய ஒடுக்குமுறை இவ்வகையானதே. ஆனால் அதை எதிர்த்து தமிழ் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பாக தமிழரசு – காங்கிரஸ் கட்சிகள் தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்வைக்கவில்லை. ஏனெனில் அதற்கு இரண்டு காரணங்கள் தடையாக இருந்தன.

ஒன்று, தமிழ் இனத்தின் மத்தியில் சிங்கள இனத்தின் மத்தியில் உருவானது போன்று தேசிய முதலாளி வர்க்கம் ஒன்று உருவாகியிருக்கவில்லை. தமிழ் பகுதிகளில் இருந்த பெரிய தொழிற்துறைகளான காங்கேசன் சீமெந்து ஆலை, உப்பளங்கள், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகித ஆலை, புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலை போன்றவை அரச நிறுவனங்கள். இவை தவிர வடக்கில் இருந்த சுருட்டு - பீடி தொழில்கள், வல்லை நெசவாலை, லைடன் பெனியன் தொழிற்சாலை, மில்க்வைற் சவர்காரத் தொழிலகம், இனிப்பு தொழிற்சாலைகள். அக்கிராயன் கரும்புத் தோட்டம், கண்டாவளை ஓட்டுத் தொழிற்சாலை என்பனவும், கிழக்கில் பரவலாக இயங்கிய நெசவு தொழிற்சாலைகளும் சிறிய முயற்சிகள். எனவே இவற்றால் ஒரு சக்திவாய்ந்த தமிழ் தேசிய முதலாளி வர்க்கத்தை உருவாக்க முடியவில்லை.

இரண்டாவது, தமிழரசு – காங்கிரஸ் கட்சிகள் இலங்கை தரகு முதலாளி வர்க்கத்தின் அங்கங்களாக இருந்ததினால் அவர்களால் தமிழ் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பாக தனிநாட்டுக் கோரிக்கையை எழுப்பவும் முடியாது. இதுவே யதார்த்தம்.

எனவே, தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் முன்வைத்த வட்டுக்கோட்டை தமிழீழத் தீர்மானம் முழுக்க முழுக்க அடுத்து 1977இல் நடைபெறவிருந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சந்தர்ப்பவாதத் தீர்மானமாகும். அதனால்தான் அவர்கள் 1977 பொதுத்தேர்தலில் அமோக வெற்றி பெற்றதும், தமிழீழத் தீர்மானத்தைக் கைவிட்டதுடன், ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் அமைந்த ஐ.தே.க. அரசுக்கு ஆதரவாகவும் மாறினார்கள்.

தனிநாடு அமைப்பதென்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்தவர்கள் அதைக் கைவிட்டபோதும், அதனால் உந்தப்பட்ட தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அதை அடைவதற்குப் போரிட்டன. ஆனால் அதுவும் இறுதியில் தோல்வியில் முடிவடைந்தது. அதற்குக் காரணம் இயக்கங்களின் ஒற்றுமையீனம் எனப் பலர் கூறி வருகின்றனர். பிரதான காரணம் அதுவல்ல. தமிழ் இனத்தின் மத்தியில் சக்தி வாய்ந்த தேசிய முதலாளி வர்க்கம் ஒன்று உருவாகி இருக்காததே காரணம்.

அப்படியான ஒரு சூழலில் இலங்கைத் தமிழினம் போன்ற சொந்தப் பொருளாதாரம் வளர்ச்சியடையாத ஒரு இனம் தனியரசு நிறுவுவதில் வெற்றி பெறுவதானால், ஒரே வழி அந்நிய சக்திகளின் நேரடித் தலையீடு இருக்க வேண்டும். அதனால்தான் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களில் சில முதலில் இந்தியத் தலையீட்டை எதிர்பார்த்தன. பின்னர் விடுதலைப் புலிகள் மேற்கத்தைய ஏாதிபத்திய சக்திகளின் தலையீட்டை எதிர்பார்த்தன.

2009இல் தமிழர்களின் தனிநாடு அமைப்பதற்கான ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் அவர்களது இனப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு ஏற்படவில்லை. எதிர்காலத்தில் இலங்கைத் தமிழினம் மீண்டும் ஒரு தனிநாட்டுக்கான போராட்டத்தைத் தொடங்குவதாக இருந்தாலும் சரி, அல்லது ஐக்கிய இலங்கைக்குள் இன அடிப்படையிலான சுயாட்சி உரிமையைப் பெறுவதாக இருந்தாலும் சரி, கவனிக்க

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# “சிந்துவெளியின் மொழிவளம் தென்னிந்தியர்களிடமே உள்ளது!”

***-டோனி ஜோசப் நேர்காணல்***

‘மனித இனம் எப்படித் தோன்றியது? எப்போது, எப்படி இந்தியாவுக்கு வந்தது? சிந்துவெளியில் வாழ்ந்த மனிதர்கள் யார்? தென்னிந்தியாவில் வாழும் திராவிடர்கள் – தமிழர்கள் யார்?’ என்பன போன்ற பல்வேறு கேள்விகள் பல காலமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுத் தொடக்கத்தில் வெளியான ‘எர்லி இந்தியன்ஸ்: தி ஸ்டோரி ஆஃப் அவர் ஆன்ஸெஸ்டர்ஸ் அண்ட் வேர் வீ கேம் ஃப்ரம்’ (Early Indians: The Story of Our Ancestors and Where We Came From) நூல் இந்தக் கேள்விகள் பலவற்றுக்கு ஆதாரபூர்வமான பதில்களைத் தந்தது. வாசகர் மத்தியில் வரலாற்று, அறிவியல் ஆர்வங்களைக் கிளர்த்திய இந்தப் நூலை எழுதிய டோனி ஜோசப் (Tony Joseph), 30 ஆண்டுகளாக இந்தியாவின் முன்னணி வணிக இதழாளர்களுள் (Business journalist) ஒருவர் என்பது சுவாரசியமான முரண். இந்திய வரலாற்றுப் பின்னணியில் சர்ச்சைக்குரிய, நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வரும் பல கேள்விகளுக்குத் தொல்லியல், மரபணுவியல் ஆதாரங்கள் அடிப்படையில் திட்டவட்டமான பதில்களை இந்த நூல் வழங்குகிறது.

அல்புனைவு (non-fiction) நூல்களுக்கான ‘டாடா லிட் லைவ்!’ விருது, ‘சக்தி பட் முதல் நூல்’ பரிசு, ‘அட்டா கலாட்டா’ பரிசு என மூன்று விருதுகளை இந்த நூல் இதுவரை பெற்றிருக்கிறது. விற்பனையில் சாதனை படைத்த இந்த நூல் தற்போது எட்டாம் மறு அச்சில் இருக்கிறது. தமிழ் உட்பட ஏழு இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகவிருக்கிறது. ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர். பாலகிருஷ்ணனின் நூல் வெளியீட்டுக்காகச் சென்னை வந்திருந்த டோனி ஜோசப் (Tony Joseph) அவர்களை ஒரு மாலை வேளையில் சந்தித்தோம். அவருடனான உரையாடலில் இருந்து:

**முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக வணிக இதழாளராகப் பணியாற்றிய நீங்கள் தொல்பழங்காலம், தொல்லியல் சார்ந்த நூலை எழுதியதன் நோக்கம் என்ன? அந்தத் துறை நோக்கி உங்களை ஈர்த்தது எது?**

ஹரப்பா (சிந்துவெளி) நாகரிகத்தின் மேல் எப்போதுமே எனக்கு ஈர்ப்பு இருந்துவந்திருக்கிறது. எல்லோரையும்போல் பள்ளியில்தான் நானும் அதைப் பற்றி முதலில் படித்தேன்.




என்னுடைய கற்பனையில் ஆழமான தாக்கத்தை எப்போதும் அது செலுத்தி வந்திருக்கிறது. நாளிதழ்களில் அதைப் பற்றி எந்தச் செய்தி வந்தாலும் தவறாமல் வாசிப்பதை வழக்கமாகக்கொண்டிருந்தேன். ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்குமுன், எனக்குச் சிறிது ஓய்வு கிடைத்தபோது, ‘ஹரப்பர்கள் யார் அவர்கள் எங்கு மாயமானார்கள் பொ.ஆ.மு. (கி.மு.) 1,900 வாக்கில் சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, இந்தியாவில் மீண்டும் நகரங்கள் உருவாவதற்கு இடையில் 1,500 ஆண்டு இடைவெளி ஏன் ஏற்பட்டது’ என்று என்னை எப்போதும் துரத்திக் கொண்டிருந்த கேள்விகளுக்கு விடைதேடும் முயற்சியில் இறங்கினேன்.

நூலை எழுதத் தொடங்கியபோது, ஹரப்பர்களை மையப்படுத்தியதாக மட்டுமே அது இருந்தது. அதுகுறித்துச் சமீப காலத்தில் பல்வேறு புலங்களில் நிகழ்ந்திருக்கும் ஆய்வுகளின் அடிப்படையில் அதற்கான விடைகளை நெருக்கமாக அணுக முடியும் குறிப்பிட்ட தொலைவுக்கு நெருங்கிச் செல்ல முடியும் என்று எனக்குத் தோன்றியது.

தோலவிரா, லோதல், ராகிகரி உள்ளிட்ட பல்வேறு தொல்லியல் தளங்களுக்குப் பயணித்தேன். மதிப்பு வாய்ந்த வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியலாளர்கள், மொழியியலாளர்கள், கல்வெட்டியலாளர்கள், சிந்துவெளி நாகரிகம் சார்ந்து ஆய்வுசெய்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியவர்கள் எனப் பல அறிஞர்களைத் தொடர்ந்து சந்தித்தேன். இந்த வேளையில்தான் ஹரப்பர்கள் யார் என்ற கேள்வியும் இந்தியாவின் முதல் உழவர்கள் யார் என்ற கேள்வியும் கிட்டத்தட்ட ஒன்று என்பதை உணர்ந்தேன். ஏனென்றால், தொல்லியல் ஆதாரங்களின்படி, பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்திலுள்ள மெஹர்கர் (Mehrgarh) என்ற இடத்தில் 9,000 ஆண்டுகளுக்குமுன் வேளாண்மை தொடங்கி, வடமேற்கு இந்தியா முழுமைக்கும் வேகமாகப் பரவியதை அறியமுடிகிறது. கிராமங்கள் அப்போதுதான் உருவாகத் தொடங்கின. பிறகு சிந்துவெளி நகரங்கள் மேலெழுந்தன. ஆக, சிந்துவெளி நாகரிகம் என்பது 9,000 ஆண்டுகளுக்குமுன் – அதாவது பொ.ஆ.மு. 7000 – ஏற்பட்ட வேளாண்மை புரட்சியின் இயல்பான தொடர்ச்சியே. அதனால்தான், ஹரப்பர்கள் யார் என்ற கேள்வியுடன் இந்தியாவின் முதல் உழவர்கள் யார் என்ற கேள்வி முக்கியத்துவம் பெற்றது. இந்தியாவின் முதல் உழவர்கள் யார் என்ற கேள்விக்கான விடையை, முதல் இந்தியர்கள் யார் என்று தெரியாமல் அறிய முடியாது.

தொடக்கத்தில் நான் நினைத்திருந்ததை விட நூலின் எல்லை இப்படி விரிந்துகொண்டே சென்றது. நூலின் பாதித் தொலைவுவரை வந்துவிட்ட பிறகு, பல்வேறு புலங்களைச் சேர்ந்த தரவுகள், தகவல்கள் கடலெனச் சேர்ந்துவிட்டதால்

இந்த நூலை எழுதி முடிக்க முடியாது என்றே எனக்குத் தோன்றியது. அப்போதுதான் உலகின் பெரும் மக்கள்தொகைக் குழுக்கள் எப்படித் தோன்றின என்ற கேள்விகளுக்கு விடை அளிக்கும் முற்றிலும் புதிய துறையான 'மக்கள்தொகை மரபணுவியல்' (Population genetics) குறித்து அறிந்தேன். அது என்னை ஈர்த்தது.

மக்கள்தொகை மரபணுவியல் சார்ந்து வெளியான ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசிக்கத் தொடங்கினேன். உலகம் முழுவதும் உள்ள மக்கள்தொகை மரபணுவியலாளர்களைத் தொடர்புகொண்டு, அந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் குறித்து விவாதித்தேன். தொடக்க கட்டத்தில் வெளியான சில ஆய்வு அறிக்கைகளின் முடிவுகள் முரணாக இருந்தன. ஆனாலும், முன்பு வாழ்ந்த மக்கள்தொகையின் மரபணுக்களுடன் தற்போதுள்ள மக்கள்தொகையின் டி.என்.ஏ – வை ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம், அவற்றுடன் நெருங்கிய தொடர்புடைய, தொடர்பே இல்லாத மக்கள்தொகைக் குழுக்கள் எவையெவை என்று கண்டறிய முடிந்தது. அந்தக் கண்டறிதல் புதிய ஒளி பாய்ச்சுவதாக இருந்தது.

அதேநேரம் டி.என்.ஏ. ஆய்வுகளை மட்டும் வைத்து, 'யார், எங்கு, எப்போது இடம்பெயர்ந்தார்கள்' என்பதைக் கண்டறிய முடியாது. அதனால், இடப்பெயர்வு சார்ந்த கேள்விகளுக்கு இந்த ஆய்வுகள் மூலம் பதில் கிடைக்கவில்லை. ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த மக்களுடைய டி.என்.ஏ – வைப் படியெடுத்து (extract) பகுத்து ஆராயக்கூடிய முறை, சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இது மக்கள்தொகை மரபணுவியல் ஆராய்ச்சியில் பெரும் பாய்ச்சலாகக் கருதப்பட்டது. நிலைமை முற்றிலும் மாறியது.

ஒரு தொல்லியல் தளத்தின் பல அடுக்குகளில் கிடைக்கும் பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த டி.என்.ஏ – வைச் சேகரித்து ஆராயும்போது, ஒரு புதிய வம்சாவளி அங்கு இடம்பெயர்ந்து, காலப்போக்கில் அந்த இடத்தின் மக்கள்தொகையை மாற்றியமைத்த காலகட்டத்தைத் துல்லியமாகக் கணிக்க முடிந்தது. கடந்த சில ஆண்டுகளில், உலகம் முழுக்க ஆயிரக்கணக்கான பண்டைய டி.என்.ஏ. மாதிரிகள் படியெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றின் முடிவுகளை வைத்து யார், எங்கு, எப்போது இடம்பெயர்ந்தார்கள், அவற்றின்மூலம் உலகின் பெரிய மக்கள்தொகைக் குழுக்கள் எப்படித் தோன்றின என்பன குறித்த துல்லியமான வரைபடத்தை உருவாக்க முடிந்திருக்கிறது.

இந்தத் துறையில் நிகழும் கண்டுபிடிப்புகள் அனைத்தும் தெற்காசியாவையே மையம் கொண்டிருப்பதாக பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. அது உண்மையல்ல. தெற்காசியாவில் நடைபெறும் இந்த ஆய்வுகள், உலகெங்கிலும் வாழும் பல்வேறு மக்கள்தொகை குழுக்களைப் பற்றிய பரவலான புரிதலை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. பல கண்டங்கள் சார்ந்து நடைபெறும் ஆய்வின் ஒரு பகுதிதான் இது. பல்வேறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு பெரிய படப்புதிரைச் சேர்ப்பதைப் போன்றதுதான் இது. ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் அந்தப் புதிரில் புதியதொரு தொடர்பை ஏற்படுத்தி, விடையை நோக்கி நம்மை அழைத்துச் செல்கிறது.

இன்றைய ஐரோப்பிய மக்கள்தொகை என்பது மூன்று இடப்பெயர்வுகளின் விளைவு. 45,000 ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த முதல் இடப்பெயர்வு, ஆதிகால முதல் மனிதர்கள் அல்லது ஹோமோ சேபியன்ஸ் – ஐ ஐரோப்பாவுக்குக் கொண்டுசென்றது. அனடோலியா (Anatolia) என்று அழைக்கப்பட்ட இன்றைய துருக்கியிலிருந்து 9,000 ஆண்டுகளுக்குமுன் ஆதி உழவர்கள் ஐரோப்பாவுக்கு இடம்பெயர்ந்தார்கள். ஏற்கெனவே அங்கு வாழ்ந்துவந்த வேடர்களைக் கணிசமான அளவில் பதிலீடுசெய்த இவர்கள், அங்கே எஞ்சியிருந்தவர்களுடன் குறிப்பிட்ட அளவுக்குக் கூடவும் செய்தார்கள். ஐரோப்பாவில் நிகழ்ந்த இரண்டாவது இடப்பெயர்வு இது.

மத்திய ஆசியப் புல்வெளிப் (Central Asian Steppe) பகுதியைச் சேர்ந்த, குதிரை செலுத்துதல் – உலோகவியலை கற்றுத் தேர்ந்த நவீன மக்கள்தொகைக் குழு 5,000 ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாவுக்கு சென்றது மூன்றாவது இடப்பெயர்வு. இந்தக் குழு தங்களை ஆரியர்கள் என்றழைத்துக்கொண்டது. நவீன மனிதர்கள் முதன்முறையாக நடமாட்டத்தில் (mobility) உயர்நிலை சாத்தியத்தை அடைந்திருந்தனர். ஏற்கெனவே மக்கள்தொகை அதிகமிருந்த ஐரோப்பா போன்ற பகுதிகளுக்குச் சென்று, அங்கு ஆதிக்கம் செலுத்துவதற்கு இந்தப் பண்பு ஆரியர்களுக்கு உதவியது. அவர்கள் ஐரோப்பாவுக்குள் நுழைந்த பிறகு, ஏற்கெனவே அங்கு வாழ்ந்துவந்த உழவர்களைப் பெரிய அளவில் பதிலீடுசெய்தும், குறைந்த அளவில் அவர்களுடன் கூடியும் ஐரோப்பாவின் மக்கள்தொகையை மீண்டும் மாற்றினார்கள் ஐரோப்பாவின் வேடர் குழுக்களில் எஞ்சியிருந்த மக்களுடனும் அவர்கள் இணைந்தார்கள். ஆக, இன்றைய ஐரோப்பியர்கள் யார் என்ற கேள்விக்கான விடை, இந்த மூன்று பெரிய இடப்பெயர்வுகளின் விளைவாக உருவானவர்கள் என்பதுதான்.

மக்கள்தொகை மரபணுவியலில் நான் கவனம் செலுத்தத் தொடங்கிய காலத்துக்கு முன்பாகவே தொல்லியல், மொழியியல், கல்வெட்டியல், வரலாறு உள்ளிட்ட துறைகள் சார்ந்த பெரும்பாலான தரவுகளைச் சேகரித்து முடித்திருந்தேன். எனவே, மனிதர்களின் தொடக்க காலம் குறித்து பல்வேறு துறைகளில் கண்டறியப்பட்ட முடிவுகளுடன், மரபணுவியலின் புதிய கண்டறிதல்கள் எப்படிப் பொருந்துகின்றன என்பதை என்னால் எளிதில் கண்டுகொள்ள முடிந்தது. 65,000 ஆண்டுகளுக்குமுன் தொடங்கி வரலாற்றுக்கு முந்தைய காலம்வரை நிகழ்ந்த நான்கு பெரிய இடப்பெயர்வுகள், இன்றைய இந்திய மக்கள்தொகையை எப்படி நிர்ணயித்தன என்பதை என்னுடைய நூல் விவரிக்கிறது.

**'உண்மையைச் சொல்வதால் பிரச்சினைக்குரிய பின்விளைவுகள் ஏற்படலாம் என்பதால், அதை எச்சரிக்கையுடன்தான் கையாள வேண்டும்' என்று உங்கள் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த நூலின் ஆசிரியராக உங்களுக்கு அது எப்படிப்பட்ட சவாலாக இருந்தது?**

உண்மையை மறைப்பதோ ஒளிப்பதோ நன்மையை விட, தீமையையே ஏற்படுத்தும் என்று எப்போதும் நான் நம்புகிறேன். வரலாற்றுத் தகவல்களை வரலாற்றுத் தகவல்களாகவே அணுகவும் கையாளவும் வேண்டும். அதேவேளை, வரலாற்றுத் தகவல்களில் இருந்து உறுதிப்படுத்தப்படாத முடிவுகளை எப்போதுமே பெறமுடியாது என்பதையும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். எனவே, அறிவியல் ஆராய்ச்சிகளின் மூலம் கிடைக்கும் தகவல்களின் பாதையில்தான் செல்ல வேண்டும் என்பதில், எந்த நேரத்திலும் என்னுடைய மனம் சந்தேகம் கொள்வதில்லை.

எடுத்துக்காட்டாக, இந்திய மக்கள்தொகை என்பது நான்கு பெரிய தொல்பழங்கால இடப்பெயர்வுகளின் விளைவாக உருவானது என்று கூறும் அதே வேளையில், இன்று வாழும் இந்திய மக்கள்தொகைக் குழுக்களில் அநேகமாக எல்லாவற்றிலுமே இந்த இடப்பெயர்வுகளின் வம்சாவளி வெவ்வேறு அளவுகளில் கலந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

*இன்றைய மக்கள்தொகை குழுக்கள் அனைத்தும் அவற்றுக்கு முந்தைய மக்கள்தொகை குழுக்களின் இணைவால் உருவானவை என்பதில் சந்தேகமில்லை. யாருமே தூய – தனித்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பிரகடனப்படுத்திக்கொள்வதற்குச் சாத்தியமில்லை.*

என்னுடைய நூலில் இடம்பெற்றுள்ள வாதங்களில் அநேகமாக எல்லாவற்றுக்கும், மதிப்புவாய்ந்த ஆய்விதழ்களில் வெளியான ஆராய்ச்சிக் கட்டுரைகளில் இருந்து சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை அறிவியல் ஆராய்ச்சி அறிக்கைகள். துணை நூற்பட்டியல் மட்டும் 10 பக்கங்களுக்கு நீள்கிறது.

**இன்றைய இந்திய மக்கள்தொகையை நிர்ணயித்த தொல்பழங்காலத்தில் நிகழ்ந்த நான்கு முக்கிய இடப்பெயர்வுகள் என்னென்ன?**

முதல் இந்தியர்கள் என்பவர்கள் 65,000 ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள். இவர்கள் 70,000 ஆண்டுகளுக்குமுன் ஆப்பிரிக்காவில் இருந்து வெளியேறி, அராபிய தீபகற்பத்துக்கு இடம்பெயர்ந்தவர்களின் வழித்தோன்றல்களே. கடைசியாக 16,000 ஆண்டுகளுக்குமுன் அமெரிக்கக் கண்டத்தையும் சென்றடைந்த இவர்கள்தான், உலகின் மற்றப் பகுதிகளில் மக்கள் உருவாவதற்குக் காரணமானவர்கள்.

இந்திய மக்கள்தொகையை வடிவமைத்த இரண்டாம் இடப்பெயர்வு சுமார் 12,000 ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தது. மேற்கு ஆசியா அல்லது ஈரானின் ஸாக்ரோஸ் (Zagros) மலைபகுதியைச் சேர்ந்த உழவர்கள், வடமேற்கு இந்தியாவில் ஏற்கெனவே வாழ்ந்துவந்த மக்களுடன் இணைந்து, இந்தியத் துணைக்கண்டத்தில் வேளாண்மை புரட்சிக்கு வித்திட்டார்கள். இதுவே சிந்துவெளி நாகரிகமாக பின்னர் வளர்ச்சியடைந்தது. ஆக, ஹரப்பர்கள் யார் என்ற கேள்விக்கு இங்கே விடைகிடைத்துவிடுகிறது. 65,000 ஆண்டுகளுக்குமுன் இங்கு வந்து வாழத்தொடங்கிய முதல் இந்தியர்கள், அவர்களுடன் மேற்கு ஆசியா – ஈரானின் ஸாக்ரோஸ் மலைப்பகுதியைச் சேர்ந்த உழவர்களின் கூட்டிணைவால் தோன்றியவர்கள்தாம் ஹரப்பர்கள்.

மூன்றாம் இடப்பெயர்வு 4,000 ஆண்டுகளுக்குமுன் கிழக்கு ஆசியாவின் வழியாக ஏற்பட்டது. இன்றைக்கு இந்தியாவின் கிழக்கு, மத்தியப் பகுதிகளில் வாழும் பழங்குடிகளின் மொழிகளான காசி, முண்டாரி ஆகியவற்றை உள்ளடக்கிய ஆஸ்ட்ரோ–ஏசியாடிக் மொழிகளை இந்தியாவுக்குக் கொண்டுவந்தது இந்த இடப்பெயர்வுதான். தென்கிழக்கு ஆசியாவின் லாவோஸ், வியட்நாம், தாய்லாந்து உள்ளிட்ட பகுதிகளில் பேசப்படும் மோன்–கெமர் மொழிகளுடன் ஆஸ்ட்ரோ–ஏசியாடிக் மொழிகள் நெருங்கிய தொடர்புடையவை.



டோனி ஜோசப் (Tony Joseph)

இன்றைக்குக் கஸகஸ்தான் என்றழைக்கப்படும் மத்திய ஆசியப் பகுதிகளில் இருந்து இந்தியாவுக்கான நான்காம் (கடைசி) இடப்பெயர்வு நிகழ்ந்தது. ஆரியர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்ட மத்திய ஆசியாவின் புல்வெளிப் பகுதியைச் சேர்ந்தவர்கள், 4,000–3,500 ஆண்டுகளுக்குமுன் தெற்காசியாவுக்கும் இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்தார்கள். இந்த இடப்பெயர்வு 4,000 முதல் 3,000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஆயிரமாண்டு காலத்தில் நிகழ்ந்தாக நம்பப்பட்டுவந்தது. ஆனால், தற்போது கிடைத்திருக்கும் மரபணுத் தரவுகள், பொ.ஆ.மு. 2000 முதல் 1500–க்கு இடைப்பட்ட 500 ஆண்டு காலத்தில்தான் இந்த இடப்பெயர்வு நிகழ்ந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதே மக்கள் குழுவின் ஒருபகுதிதான், அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாவுக்கு நகர்ந்திருந்தது.

இன்றைய இந்தியாவின் (தொல்பழங்காலத் தெற்காசியா) எந்தப் பகுதியில் வாழும் மக்கள்தொகைக் குழுக்களை எடுத்துக்கொண்டாலும் – அது சாதியப் படிநிலையில் எந்த இடத்தில் இருந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், எந்த மதத்தைப் பின்பற்றினாலும் – மேற்சொன்ன நான்கு பெரிய இடப்பெயர்வுகளால் உருவானவையே. இன்றைய இந்திய மக்கள் குழுக்கள் அனைத்தும், இந்த நான்கு இடப்பெயர்வுகளின் வம்சாவளியை வெவ்வேறு அளவுகளில் சுமந்துகொண்டிருப்பவையே.

இந்தியர்களின் வம்சாவளிக்கான ஆதாரம், முதல் இந்தியர்களிடம் இருந்து வந்த ஒன்று என்ற கண்டறிதல் திகைக்க வைக்கிறது. 'முதல் இந்தியர்கள்' யார் என்ற கேள்வி எப்போதும் நம் ஆவலைத் தூண்டிவந்திருக்கிறது. இன்றைய ஆப்பிரிக்காவில் தோன்றி இந்தியாவில் முதலில் குடியேறிய ஆதி இந்தியர்களின் வம்சாவளித் தொடர்ச்சியை இந்திய மக்கள்தொகை தனக்குள் சுமந்துகொண்டிருப்பதால், நம்மை நாமே கண்ணாடியில் பார்த்துக்கொள்வதன் மூலம் நம் மூதாதையர்கள் யார் என்பதற்கான விடையைக் காணலாம். இது ஓர் முக்கியத்துவம் வாய்ந்த கண்டறிதல் என்பதில் சந்தேகமில்லை.

**இந்தியத் துணைக்கண்டத்தில் உள் இடப்பெயர்வுகள் நடந்தனவா? அவை எவ்வளவு தொலைவுக்கு நீண்டிருந்தன?**

வடமேற்கு இந்தியாவில் பரவிய வேளாண்மையே தன்னளவில் ஒரு உள் இடப்பெயர்வுதான். ஒரு பகுதியில் வேளாண்மை நடைபெறத் தொடங்கும்போது, மக்கள் அந்த இடத்தில் தங்குகின்றனர். அப்போது முன்பைவிட குறிப்பிட்ட பகுதியில் மக்கள்தொகை அதிகரிக்கத் தொடங்கும். இது மற்ற பகுதிகளுக்கு இடப்பெயர்வை நிகழ்த்தி, அந்த மக்கள்தொகைக்கு மறுவடிவம் கொடுப்பதில் சென்று முடிகிறது. ஆகவே, உள் இடப்பெயர்வு என்பது எப்போதும் பெரிய இடப்பெயர்வுகளின் ஒரு பகுதிதான்.

பொ.ஆ.மு. 1900 வாக்கில் தொடங்கிய சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கும் உள் இடப்பெயர்வுகளுக்கும் தொடர்பு உண்டு. இன்றைக்கு வட இந்தியா, தென்னிந்தியா என்று அழைக்கப்படும் பகுதிகளுக்கு மக்கள் அப்போதுதான் நகர்ந்தார்கள். சிந்துவெளி நாகரிகத்தினர் புனிதங்களாகச் சுமந்துகொண்டிருந்த மொழி, பண்பாடு, நம்பிக்கை முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை இடம்பெயர்வின்போது சுமந்து சென்றார்கள். ஆகவேதான், இன்றைய இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் முற்றம் வைத்து வீடு கட்டுதல், மரங்களைப் புனிதமாகக் கருதுதல் போன்ற பண்பாட்டுச் சின்னங்களின் ஆதாரம், சிந்துவெளி நாகரித்தோடு ஒப்புமைப்படுத்திப் புரிந்து கொள்ளப்படுகிறது. இன்றைய இந்தியாவுடன் இணைந்திருக்கும் ஒரு

ஒரு பண்பாட்டுப் பசையாக ஹரப்பர்களையும் அவர்களுடைய நாகரிகத்தையும் கருதலாம். நாம் இன்றைக்குக் குழந்தைகளுக்குச் சொல்லும் பஞ்சதந்திரக் கதைகள், ஹரப்பர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லத் தொடங்கியவையாக இருக்கக்கூடும். சிந்துவெளியின் சின்னம் ஒன்றில் பானையில் கல்லைப் போடும் காக்கை ஒன்றின் சித்திரம் உள்ளது. தங்கள் மொழிகளையும் பண்பாட்டையும் அவர்கள் பரப்பினார்கள். 'எர்லி இந்தியன்ஸ்' முன்வைத்திருப்பதைப் போல், அவர்கள் பூர்வ – திராவிட மொழியைப் பேசியிருக்கக்கூடும்.

பொ.ஆ.மு. 2000 – 1500 காலகட்டத்தில் மத்திய ஆசியாவில் இருந்து வட இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தவர்களால் மொழிமாற்றம் ஏற்பட்டது. இந்தோ – ஐரோப்பிய மொழி அல்லது தொடக்க நிலை சமஸ்கிருதம் அல்லது பிராகிருதம் என்று கருதப்படும் மொழிகளை ஆரியர்கள் கொண்டுவந்தார்கள். அவர்களுடைய இடப்பெயர்வு ஒப்பீட்டளவில் தென்னிந்தியாவில் குறைவாக இருந்ததால், ஹரப்பர்களின் மொழி தென்னிந்தியாவில் செழித்தது. திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்டவை இன்றைக்கு இந்திய மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மக்களால் பேசப்படுகின்றன.

**இந்திய வரலாற்று ஆய்வாளர்களும் அறிவியலாளர்களும் உண்மையைச் சொல்வதில்லை, சார்புடன் செயல்படுகிறார்கள் என்பன போன்ற குற்றச்சாட்டுகளை ஒரு பிரிவினர் முன்வைக்கிறார்கள். அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

இது உண்மைக்கு நேரெதிரானது. எனக்குத் தெரிந்த அறிவியல் – வரலாற்றுத் திரிபுகளுள் மிக மோசமானவை வாட்ஸ்அப் குழுக்கள், சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றில் திட்டமிட்டுப் பரப்பப்படுபவையே. இந்தக் கட்டுக்கதைகளை உருவாக்குபவர்கள் தொழில்முறை வரலாற்று ஆய்வாளர்கள் அல்லர் அரசியல் கட்சிகள், இயக்கங்களின் தொண்டர்கள். கடந்த காலத்தில் நிகழ்ந்தவை குறித்து தொழில்முறை வரலாற்று ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகளைப் பூசி மெழுகி, தங்களுடைய புராணக் கதைகளைப் புகுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ள பரப்புரையாளர்களிடம் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். தங்கள் அரசியல் பரப்புரையின் நோக்கங்களுக்குப் பொருந்தும் வகையில் வரலாற்றை மாற்றி எழுத அவர்கள் விரும்புகிறார்கள்.

தொழில்முறை வரலாற்று ஆய்வாளர்களைப் பொறுத்தவரை, ஒரு வரலாற்றுத் தரவுக்கான பொருள் விளக்கம் (Interpretations) சார்ந்து அவர்களிடையே மாறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால், ஏற்றுக்கொள்ளப்பட்ட – இறுதி செய்யப்பட்ட தகவல்கள் சார்ந்து மிக அரிதாகவே அவர்கள் வேறுபடுகிறார்கள். புராணங்களுடனும், அரசியல் கற்பனைகளுடனும் வரலாற்றுத் தகவல்கள் முரண்படும்போதெல்லாம், புராணங்கள் – அரசியல் கற்பனைகளை அவர்கள் கேள்விக்கு உள்ளாக்குகிறார்கள். ஆக, நாம் இன்றைக்கு எதிர்கொண்டிருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல், தங்கள் அரசியல் நோக்கங்களுக்காக வரலாற்றை மாற்றி எழுதிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளும் அவர்களுடைய பரப்புரையாளர்களும்தான்.

**இந்தியாவில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக ராகிகரியில் பண்டைய மரபணு சார்ந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட வசந்த் ஷிண்டே, நீரஜ் ராய் ஆகியோர் தங்கள் ஆய்வு முடிவுகளுக்கு முரணான தகவல்களைச் செய்தியாளர் சந்திப்பில் கூறியது சர்ச்சையானது. இதற்கு அரசியல் அழுத்தம், அரசியல் சார்பு காரணமாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?**

இந்தக் கேள்விக்கு என்னால் நேரடியாகப் பதில்கூற முடியாது. அதேநேரம் ஊடகங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதன் அடிப்படையில் பேசலாம். அந்த ஆராய்ச்சிக் கட்டுரை முன்வைக்கும் முடிவுகளும், அந்த முடிவுகள் குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகளும் முற்றிலும் முரணானவை என்பதை யாரும் எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

இந்த ஆண்டில் (2019) வெளியான இரண்டு மரபணுவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஒரே முடிவுகளை எட்டி ஒன்றுக்கு மற்றொன்று ஆதரவாகத் திகழ்கின்றன: ஒன்று, 65,000 ஆண்டுகளுக்குமுன் ஆப்பிரிக்காவில் இருந்து வெளியேறி இந்தத் துணைக்கண்டத்துக்கு இடம்பெயர்ந்த முதல் இந்தியர்களும் ஈரானின் ஸாக்ரோஸ் மலைப்பகுதியைச் சேர்ந்த உழவர் குழுவுமே வடமேற்கு இந்தியாவில் வேளாண் புரட்சியைத் தொடங்கி, சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்த மக்கள் குழு என்பது. இரண்டு, மத்திய ஆசியப் புல்வெளிப் பகுதி எனப்படும் இன்றைய கஸகஸ்தான் பகுதியைச் சேர்ந்தவர்கள் (ஆரியர்கள்), இந்தோ – ஐரோப்பிய மொழிகளுடன் பொ.ஆ.மு. 2000 முதல் 1500 – க்குள் கணிசமான அளவில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தார்கள். சுருக்கமாகச் சொன்னால், சிந்துவெளி நாகரிகம் என்பது இந்தோ – ஐரோப்பிய மொழிகள் இந்தியாவுக்கு வருவதற்கு முந்தையது அல்லது ஆரியர்களுக்கும் முந்தையது.

ஆனால், பெரும்பாலான ஊடகங்களில் வெளியான செய்திகள் இதற்கு நேர்மாறாக இருந்தன: ஹரியாணாவின் ராகிகரியில் உள்ள சிந்துவெளித் தொல்லியல் தளத்தில் பெறப்பட்ட டி.என்.ஏ. மாதிரியில் ஆரிய வம்சாவளித் தொடர்பு இல்லை. ஆகவே, ஆரியர்கள் இடப்பெயர்ந்தவர்கள் அல்லர் என்று அந்தச் செய்திகள் கூறின. இது முற்றிலும் திரிக்கப்பட்ட, தவறான வரலாற்று விளக்கம். சிந்துவெளி டி.என்.ஏ – வில் ஆரிய வம்சாவளித் தொடர்பு இல்லை என்ற தகவல், ஆரியர்கள் சிந்துவெளி நாகரிகம் செழித்திருந்த காலத்தில் அங்கு வாழ்ந்திருக்கவோ, அங்கு வாழ்ந்த மக்களுடன் கலந்திருக்கவோ இல்லை. அவர்கள் அதற்குப் பிற்பாடு வந்தவர்கள்தான் என்பதை வலுவான ஆதாரத்துடன் தெளிவுபடுத்துகிறது. அதேநேரம் இன்றைய இந்தியர்களின் டி.என்.ஏ.வில் ஆரிய வம்சாவளித் தொடர்பு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

**இந்தியாவில் வரலாறு, அறிவியல் இரண்டுக்கும் பரவலான வரவேற்பு இருந்ததில்லை. ஆனால், கடந்த ஆண்டு நிலைமை மாறியதாகத் தெரிகிறது. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

*உலக நாடுகளில் இந்தியா போன்ற வெகு சில நாடுகளில் மட்டுமே அரசியல் விவாதங்களில் தொல்பழங்காலம் முன்னிலைப்படுத்தப்படுகிறது. பெரும்பாலான நாடுகளில் அறிவியலாளர்களும் கல்வியாளர்களும் மட்டுமே தொல்பழங்காலம் குறித்த விவாதங்களில் ஈடுபடுகிறார்கள் அரசியல்வாதிகளோ, அரசியல் இயக்கங்களின் தொண்டர்களோ இதைக் கண்டுகொள்வதில்லை. ஏனென்றால் நாடு, தேசியம் குறித்த சிந்தனைகளில் பல நாடுகள் ஒரு முடிவை எட்டிவிட்டன. அவர்களைப் பொறுத்தவரை தேசியம் என்பது தொல்பழங்காலத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல.*

எடுத்துக்காட்டாக, பண்டைய டி.என்.ஏ – வைப் பயன்படுத்தி, இங்கிலாந்தில் சுமார் 9,000 அல்லது 10,000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த மனிதனுடைய முகத்தை மறுகட்டமைப்புச் செய்தார்கள். 'செடார் மேன்' என்று இணையத்தில் தேடினால் அந்த முகத்தைப் பார்க்கலாம். கருப்புத் தோலும் நீலக் கண்களையும் கொண்டிருந்த அந்த மனிதன் ஒரு வேடன். இன்றைக்கு வெள்ளை நிறத்தவர்களை

பெரும்பான்மையாகக் கொண்ட இங்கிலாந்து மக்கள், இந்தப் படத்தையும் கண்டறிதலையும் இரசித்தார்கள். ஆனால், ஒருபோதும் அங்கு அது அரசியல் விவாதமாக, சர்ச்சையாக மாறாது.

இந்தியாவில் தொல்பழங்காலம் அரசியல் விவாதமாக மையம் கொண்டிருப்பதற்கு, யார் பெரியவர் என்ற போட்டி மிகுந்த ஒரு களமாக அது இருப்பதுதான் காரணம். பல்வேறு தரப்புகள் தங்களைத் தக்கவைத்துக் கொள்ள வேறுபட்ட வரலாறுகளைப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கின்றன. தேசம் குறித்த நம்முடைய சிந்தனை என்பது முன்பு எப்போதையும்விட இன்றைக்குப் போட்டிமிகுந்த ஒன்றாக மாறியிருக்கிறது. அதனால்தான், தொல்பழங்காலம் குறித்த புரிதல் இந்தியாவில் இன்றைக்கும் ஒரு யுத்தகளத்தை ஒத்திருக்கிறது.

தேசம் குறித்த இரண்டு வெவ்வேறு கருத்தாக்கங்களுக்கு இடையிலான மோதலில், தொல் பழங்காலத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். தேசம் குறித்த முதல் கருத்தாக்கம் சாதி, மதம், மொழி, இடம் என எல்லாவற்றையும் உள்ளடக்கி ஒவ்வொருவரையும் இந்தியன் என்ற ஒரே புள்ளியில் இணைத்து, காலனி ஆதிக்கத்தை எதிர்த்த விடுதலைப் போராட்ட காலம் தொட்டுத் தொடர்ந்துவருகிறது.

இதற்கு மாறாக, கடந்த ஒரு நூற்றாண்டாகத் தேசம் குறித்து முன்வைக்கப்படும் இரண்டாம் கருத்தாக்கமோ, நம்முடைய தேசத்தைப் பெரும்பான்மை மதத்தின் அடிப்படையில் மட்டுமே வரையறுத்து, மற்ற சமூகங்களை அதிலிருந்து விலக்கிவைக்கிறது. தேசம் குறித்த முதல் கருத்தாக்கம் தாஜ் மகாலை தேசியச் சின்னமாகவும் காந்தியை தேசத் தந்தையாகவும் முன்னிறுத்தியது. அதேவேளை, இரண்டாம் கருத்தாக்கமோ தாஜ் மகாலை தேசிய அவமானமாகவும் காந்தியை வில்லனாகவும், அவரைப் படுகொலை செய்த கோட்சேவைக் கதாநாயகனாகவும் முன்னிறுத்துகிறது.

இந்த இரு கருத்தாக்கங்களுக்கும் இடையிலான மோதலில், தொல்பழங்காலம் ஓர் ஆடுகளமாக உள்ளது. ஏனென்றால், சிறுபான்மை மதங்களை விலக்கி வைக்கும் தரப்பினர், உலகிலுள்ள மற்ற மக்கள்தொகைக் குழுக்களைப் போலவே இந்தியர்களும் பல்வேறு இடப்பெயர்வுகளால் உருவானார்கள்தான் என்ற வரலாற்று–அறிவியல் உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

வரலாற்றின் மீது சமீபகாலமாக ஆர்வம் பெருகுவதற்கு, 'வரலாற்றின் அரசியல் முக்கியத்துவம்' ஒரு வகையில் காரணம்தான். ஆனால், அது மட்டுமேதான் காரணம் என்று கூற முடியாது. பண்டைய டி.என்.ஏ. மூலம் தொல்பழங்காலம் குறித்த புரிதலை மேம்படுத்தும் வகையில் வெளியாகும் கண்டுபிடிப்புகள்– கண்டறிதல்கள் புதிய வெளிச்சத்துக்கு இட்டுச்செல்கின்றன என்பதும் இதில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உண்மை.

**சிந்துவெளிக்கும் திராவிட இன மக்களுக்கும் நேரடித் தொடர்பு உள்ளதா?**

திராவிடமும் ஆரியமும் இனங்கள் அல்ல என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும் இரண்டுமே மொழிக் குடும்பங்கள். திராவிடர் என்ற சொல் திராவிட மொழிகளைப் பேசும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைச் சுட்டுகிறது. இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் துணைக்குழுவான இந்தோ–ஆரிய மொழிகளைப் பேசும் குழுவைச் சேர்ந்தவர்கள் ஆரியர் என்று தங்களுக்குப் பெயர் சூட்டிக்கொண்டார்கள். அதனால் இது இனம் சார்ந்த கேள்வியல்ல, மொழி சார்ந்ததே. அந்த வகையில், ஹரப்பர்கள் பேசியது இன்றைய திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழிகளின் மூதாதை மொழி அல்லது பூர்வ–திராவிட மொழி. இது மரபணுவியல், மொழியியல், தொல்லியல் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து கிடைத்த வலுவான ஆதாரங்கள் மூலம் உறுதியாகிறது.

மிகச் சிறந்த அறிஞரும் கல்வெட்டியலாளருமான மறைந்த ஐராவதம் மகாதேவன், வெகுகாலத்துக்கு முன்பே தன் உள்ளுணர்வால் இதைத் தெரிந்து கொண்டிருந்தார்: சிந்துவெளி மரபுகள் வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் பொதுவாக இருக்கும் அதேநேரம், அதன் மொழி வளம் இன்றைக்குத் தென்னிந்தியாவிடம்தான் உள்ளது.

**பேட்டி கண்டவர்கள்:**
**ஆதி வள்ளியப்பன்**
**சு. அருண் பிரசாத்**

*நன்றி: இணையப்பக்கம்*

எழுத்தாளன் என்பவன்அவனுடைய நாட்டின் வர்க்கத்தின் உணர்ச்சிமயமான ஊதுகுழல். அதன் செவி, கண், இதயம் எல்லாம் அவன் தான். அவன் தான் அவனது சகாப்தத்தின் குரல். அவன் பழமையைப் பற்றி எவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நிகழ்காலத்தில் தனது சமுதாயத்தின் முன்னுள்ள கடமைகளை வரையறுக்கவும் நிறைவேற்றவும் முடியும். அவனுக்கு மனித சரித்திரம் தெரியவேண்டும். மக்கள் எப்படி சிந்திக்கிக்கிறார்கள் என்பதையுணர வேண்டும்.

**–மாக்ஸிம் கோர்க்கி**

**4ம் பக்கத்தொடர்ச்சி…**

வாழ்க்கையை மனிதநேயம், சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சமூக நீதிக்கான போராட்டத்திற்காக அர்ப்பணித்துள்ளார். இந்தப் போராட்டத்திற்காக அவர் தனது உயிரைத் தியாகம் செய்தார், ஒருபோதும் போராட்டத்தை அவர் கைவிடவில்லை, தூய தனது கருத்திற்கு ஒருபோதும் அவர் துரோகம் இழைக்கவில்லை…… அவரது வாழ்க்கையின் இறுதி வரை.

இருப்பினும், ஹெலின் பெலெக் தனது போராட்டத்தில் தனியாக இருக்கவில்லை, அவரைப் போலவே துருக்கிய தன்னலக்குழுக்களால் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட யோரூம் குழுவும். ஹெலின் பெலெக்கின் பெற்றோர் மற்றும் அவரது சக தோழர்களும் இப்போராட்டத்தில் அவருடன் சேர்ந்திருந்தனர். துருக்கி மற்றும் ஐரோப்பாவில் நடைபெற்ற ஆதரவு நடவடிக்கைகள் மூலம், யோரூம் குழுவின் உண்ணாவிரதம் மற்றும் அதன் கோரிக்கைகளை பொது மக்கள் கவனத்திற்குக் கொண்டு வர அவர்கள் பாடுபட்டனர். யோரூம் குழுவின் போராட்டம், துருக்கியில் உள்ள பல்வேறு இடதுசாரி அமைப்புகளின் ஆதரவைப் பெற்றது, குர்திஷ் தேசியவாத இயக்கம் உட்பட. பல பத்திரிக்கையாளர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் அறிவுமான்கள் யோரூம் குழுவினரின் கோரிக்கைகளுக்கு ஆதரவளித்துள்ளனர்.

ஹெலின் பெலக்கின் மரணம், துருக்கிய அரசாங்கத்தின் அட்டூழியங்களை உலகுக்கு நினைவூட்டுகிறது, மேலும், அவரது தியாகம் துருக்கியிலோ அல்லது உலகின் பிற இடங்களிலோ மக்கள் விடுதலைப் போராட்டத்தில் ஒரு உந்து சக்தியாக தொடரும்.

விடுதலையைப் பாடும் எந்தப் பாடலையும் அணைக்க முடியாது!

நீதியை நிலைநிறுத்தும் எந்தக் குரலையும் நிறுத்த முடியாது!


யோரூம் குழுவைச் சேர்ந்த, இப்ராஹிம் கோக்சேக் மற்றும் இன்னும் சிறையில் உள்ள முஸ்தபா கோசக் இருவரும் உண்ணாவிரதத்தை இன்னும் தொடர்கின்றனர், அவர்களும் ஹெலின் பெலெக் போன்று விதியின் விளிம்பில் உள்ளனர்……

(பிற்குறிப்பு: முஸ்தபா கோசக் மரணத்தை தழுவி விட்டார்)

**நன்றி: சோசலிஸ் (sosialis)**
**தமிழாக்கம்: சாந்தலட்சுமி பெருமாள்**

**1870**-ம் ஆண்டு ஏப்ரல் 22-ம் நாள் ரஷ்யாவின் வால்கா நதிக்கரையோரம் உள்ள சிம்பிர்ஸ்க் எனும் நகரத்தில் பிறந்தார் விளாடிமிர் இலீச் உல்யானவ் என்ற லெனின். அந்த நகரம் இப்போது லெனினின் நினைவாக உல்யானவ்ஸ் என்று அழைக்கப்படுகிறது. லெனினுக்கு அலெக்ஸாண்டர், டிமிட்ரி என்ற சகோதரர்களும், ஆனர், மரியா, ஆல்கா என்ற சகோதரிகளும் இருந்தனர். அன்பே உருவானவராய் விளங்கினார் அவரின் தாய். லெனின் தந்தை கல்வி அதிகாரியாக இருந்தார். குடும்பமே தெய்வப் பற்று உடையவர்களாக இருந்தாலும் லெனினும் அவர் சகோதரர் அலெக்சாண்டரும் ஆலயம் செல்ல விரும்பாதவர்களாக இருந்தனர். லெனினின் பெற்றோரும், குழந்தைகளின் சுதந்திரத்தில் தலையிடவில்லை. அதனால், லெனினும் அலெக்சாண்டரும் சிறுவயது முதலே, சுதந்திரமாகச் செயல்படுதல், சுயமாகச் சிந்தித்தல் என்று இருந்தனர். லெனினின் அண்ணன் அலெக்ஸாண்டர் முற்போக்குக் கொள்கை உடையவராகவும், அப்போதைய ரஷ்ய ஆதிக்க அரசுக்கு எதிரான தீவிரவாத சிந்தனை கொண்டவராகவும் இருந்தார்.

# யுகமாகி நிற்கிறார் லெனின்



**மா**மேதை லெனின் பிறந்து 150ஆண்டுகள் ஆகின்றன. அவர் இறந்து 95 ஆண்டுகள் ஆகின்றன. லெனின் மறைவுக்குப் பிறகான இக்காலத்தில் உலக அளவில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த ஒரு நூற்றாண்டின் வரலாற்றில் லெனின் ஏற்படுத்திய தாக்கம் மகத்தானது. அது அழிக்க முடியாதது. எதிர்காலத்திலும் பல மாற்றங்களுக்கு வித்திடக் கூடியது. ஆம், தோழர் லெனின் வியத்தகு மாமனிதர்.

1920ஆம் ஆண்டில் ஏப்ரல் 22 அன்று தமது பிறந்த நாளை யாரும் கொண்டாடக்கூடாது என லெனின் உத்தரவிட்டார். ஆனாலும் அதையும் மீறி பிறந்த நாள் வாழ்த்துக்கூட்டங்கள் ரஷ்யாவில் நடைபெற்றன. அத்தகைய ஒரு கூட்டத்தில் பேசிய புகழ்பெற்ற எழுத்தாளரும் லெனினுடைய நண்பருமான மக்சிம் கார்க்கி, “சில மனிதர்களைப் பற்றி பேசுவது எளிதானதல்ல, அவர்களுடைய சிறப்புகள் ஒரு சில மட்டும்தான் என்று குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியாது. நான் சொல்லோவியம் தீட்டுவதில் வல்லவன் என்றாலும், லெனினுடைய உருவத்தை உங்கள் முன் சித்தரிக்க சரியான சொற்கள் கிடைக்காமல் தவிக்கிறேன்” என்றார். லெனின் வாழ்ந்த போதும் அவர் இறந்த பிறகும், அவரைப் பற்றியும் அவருடைய பங்களிப்புகள் பற்றியும் ஏராளம் எழுதப்பட்டுள்ளன, பேசப்பட்டுள்ளன.

**மார்க்சிய ஒளியில்...**

ஒரு செல் உயிரியிலிருந்து குரங்கு வரையிலும், குரங்கிலிருந்து மனிதனும் உருவான பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை சார்லஸ் டார்வின் உலகிற்கு அளித்தார். மனிதகுல வரலாற்றில் உருவான முதலாளித்துவம் பற்றி அலசி ஆய்வுசெய்து, முதலாளித்துவம் வீழ்ச்சியடைவதும் தொழிலாளி வர்க்கம் வெற்றிபெறுவதும், தவிர்க்க முடியாதது என மாமேதைகள் மார்க்சும், ஏங்கெல்சும் இணைந்து வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் குறிப்பிட்டனர். இந்த அறிக்கையின் வெளிப்பாடாக உருவானதுதான் மார்க்சியத் தத்துவம்.

**ஜி.ராமகிருஷ்ணன்**
அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

‘முதலாளிகள் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி உபரி இலாபத்தை அபகரிக்கின்றனர்’ என்ற மார்க்சின் கூற்றை, ‘முதலாளி வர்க்கத்தை மார்க்ஸ் கையும் களவுமாக பிடித்தார்’ என்று வர்ணனை செய்து, மிக எளிமையாக விளக்கினார் லெனின்.

“முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தி சமூகமயமாகி வருகிறது. அதேநேரத்தில் அதன் பயன் மேலும் மேலும் தனியுடைமை ஆக்கப்படுகிறது, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் புரட்சி வெற்றிபெறுவதற்கான அடிப்படை இதுதான்” என்று மார்க்சியத் தத்துவம் கூறுகிறது. இந்தத் தத்துவத்தை உலகில் நடைமுறைப்படுத்திய பெருமை லெனினைச் சாரும். ஏற்கனவே ரஷ்யாவில் மார்க்சிய குழுக்கள் உருவாக்கப்பட்டன என்றாலும், பல குழுக்களை இணைத்து 1898ஆம் ஆண்டு ரஷ்ய ஜனநாயக தொழிலாளர் கட்சியை லெனின் உருவாக்கினார். இதைத்தொடர்ந்து 1917ல் நவம்பர் 7 புரட்சி வரையில் லெனின் ஆற்றிய பணிகள், அவரது தலைமையிலான

போல்ஷ்விக் கட்சி நடத்திய போராட்டங்கள் உலக வரலாற்றின் போக்கையே மாற்றின.

தோழர் லெனின் ரஷ்யாவில் அன்று நிலவிய அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளை ஆய்வு செய்து கட்சிக்கான திட்டத்தை உருவாக்கியதோடு பல நூல்களையும் எழுதினார். நேரடியாக விவசாயிகளை - தொழிலாளிகளை அணிதிரட்டுவதிலும் ஈடுபட்டார். இக்காலக்கட்டத்தில் அவர் எழுதிய நூல்களில் முக்கியமானவை ரஷ்ய விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சி செய்ய வேண்டியது என்ன, அரசும் புரட்சியும், ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகவாதிகளின் இரண்டு நடைமுறை உத்திகள் போன்ற பல நூல்கள்.

**பண்பாட்டுத் தளத்திலும்...**

1905ஆம் ஆண்டு முதலாம் ரஷ்யப் புரட்சியின் தோல்வியிலிருந்து படிப்பினையாக நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்க உழைப்பாளிகளைத் திரட்டுவதில் கம்யூனிஸ்ட் கட்சி முனைப்பு காட்டியது. வர்க்கப் போராட்டத்தில் மட்டுமல்ல. ரஷ்யாவில் அன்று இருந்த எழுத்தாளர்கள், கலை இலக்கியவாதிகளோடு தொடர்பு கொண்டு பண்பாட்டுத் தளத்தில் அவர்களை ஊக்குவிப்பதில் லெனின் முனைப்பு காட்டினார். சமூக மாற்றத்தில் எழுத்தாளர்கள் உருவாக்கிய இலக்கியத்தின் பாத்திரத்தை லெனின் வெகுவாகப் பாராட்டினார். மாபெரும் எழுத்தாளர் டால்ஸ்டாயின் படைப்புகளைப் பற்றி கூறுகிறபோது, ‘ரஷ்யப்புரட்சியின் கண்ணாடி’ டால்ஸ்டாய் என்றார். அதைப்போலவே கார்க்கியையும் ஊக்குவித்தார். கார்க்கியின் தாய் நாவலைப் படித்து பலர் கம்யூனிஸ்ட்டுகளாக மாறியது என்பது ரஷ்யப்புரட்சியின் வரலாறு.

**ஏகாதிபத்தியம் பற்றிய ஆய்வு**

முதல் உலக யுத்தம் வெடித்தபோது ஐரோப்பிய நாடுகளில் இருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சிகள் அந்தந்த நாட்டில் அதை உள்நாட்டுப்போராக மாற்ற வேண்டும், உலக யுத்தம் என்பது உலகச் சந்தைகளை பங்கிட்டுக் கொள்வதற்கான ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே நடக்கக்கூடிய மோதலே என்று லெனின் மதிப்பீடு செய்தார். கம்யூனிஸ்ட் அகிலத்தில் இந்தக் கருத்தை முன்வைத்தார். துரதிருஷ்டமாக ஜெர்மனி உள்ளிட்ட சில கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் இக்கருத்தை ஏற்கவில்லை.

இப்பின்னணியில்தான் ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் என்ற நூலை லெனின் எழுதினார். மார்க்ஸ் ஏங்கெல்ஸ் காலத்திலேயே ஏகாதிபத்தியம் உருவாவதற்கான அறிகுறிகள் இருந்தாலும் ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியைப் பற்றி அவர்களால் குறிப்பிட இயலவில்லை. ஆனால் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியை ஆய்வு செய்து, முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் ஏகாதிபத்தியம் என்ற முடிவுக்கு லெனின் வந்தார். ஏகாதிபத்திய நாடுகளுக்குள் மோதல் ஏற்படுகிற போது உலக முதலாளித்துவ சங்கிலியில் பலவீனமாக உள்ள ரஷ்யாவில் அந்தச் சங்கிலியை உடைத்து நொறுக்கி, அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்ற முடிவுக்கு வந்து, அதன்படி போல்ஷ்விக் கட்சி லெனின் தலைமையில் மாபெரும் புரட்சியை நடத்துவது என்ற முடிவுக்கு வந்தது.

**உணவு, சமாதானம், நிலம்**

1917ஆம் ஆண்டு அக்டோபர் 10 அன்று ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு கூடியது. ஆயுதம் தாங்கிய புரட்சி நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்று கட்சி முடிவு செய்தது. அக்கூட்டத்தில் கமனேவ், ஜிகனேவ், டிராட்ஸ்கி ஆகிய மூவரும் மாற்றுக் கருத்து கூறினார்கள். எனினும் அக்டோபர் 25 (பிற்காலத்தில் நவம்பர் 7) அன்றைய நாளே புரட்சியை துவக்குவதற்கான பொருத்தமான நாள் என்று லெனின் வழிகாட்டுதலால் முடிவு செய்யப்பட்டு மாபெரும் புரட்சி நடைபெற்றது. அரண்மனைகளையும் அதிகாரங்களையும் கைப்பற்றிய பிறகு அன்றைய இரவு சோவியத் வீரர்களும் தோழர்களும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில், புரட்சியின் தீர்மானத்தை எழுதிக்கொண்டிருந்தார் லெனின். உணவு, சமாதானம், நிலம் ஆகியவையே ரஷ்யப்புரட்சியின் அடிப்படை முழக்கங்கள் என தீர்மானமாக வரையறை செய்தார்.

புரட்சிக்குப் பிறகு, புரட்சியை வீழ்த்துவதற்கு முதலாளித்துவ சக்திகளும் எதிர்ப்புரட்சி சக்திகளும் மேற்கொண்ட எண்ணற்ற தடைகளை, தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்து, சோவியத் ஒன்றியத்தில் ஒரு திட்டமிட்ட சோசலிச பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க லெனின் தீவிரமாகப் பணியாற்றினார். உலகம் முழுவதும் முதலாளித்துவ பொருளாதாரம் கோலோச்சிய அந்தக் காலக்கட்டத்தில் சோவியத் ஒன்றியத்தில் மட்டும் புதிதாக சோசலிச பொருளாதாரக் கட்டுமானத்தை நிர்மாணிப்பதற்காக அயராது உழைத்தார் லெனின். ஒவ்வொரு நெருக்கடியையும் தீர்ப்பதற்கு பொருத்தமான ஆய்வுகளை மேற்கொண்டு கொள்கை அடிப்படையிலான – கோட்பாடு அடிப்படையிலான தீர்வுகளை நடைமுறைப்படுத்தியதில் லெனின் வெற்றிகண்டார். மின் உற்பத்தி, கனரகத் தொழில்கள், கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தார்.

**இன்றும் வழிகாட்டுகிறார்...**

இன்றைக்கு கொரோனா பாதிப்பால் உலகமே துயரத்தின் பிடியில் சிக்கியிருப்பதைப் பார்க்கிறோம். இதற்கு அடிப்படையான காரணம் முதலாளித்துவ சமூக பொருளாதார கட்டமைப்பில் எந்த நாட்டிலுமே பொது சுகாதார கட்டமைப்பு வலுவானதாக இல்லை. சுகாதாரம் என்பது பெருமளவிற்கு தனியார் முதலாளிகள் – கார்ப்பரேட் முதலாளிகள் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சோசலிசத்தை உயர்த்திப்பிடிக்கும் சீனா, கியூபா, வியட்நாம், வடகொரியா போன்ற நாடுகளும் சரி, இந்தியாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி தலைமையிலான கேரள, இடது ஜனநாயக முன்னணி அரசும் சரி, பொது சுகாதார கட்டமைப்பை வலுவாக வைத்திருப்பதன் விளைவாகத்தான் கொரோனா பாதிப்பை வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்கின்றன. இதற்கு அடிப்படையானது, 1917 புரட்சிக்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தில் உலகிலேயே முதல் முறையாக முற்றிலும் பொது சுகாதார கட்டமைப்பை லெனின் உருவாக்கினார் என்பதுதான். அத்தகைய, பொது சுகாதாரம் உள்ளிட்ட சோசலிச பொருளாதாரக் கட்டுமானத்தை லெனினுக்குப் பிறகு

ஸ்டாலின் பாதுகாத்து வளர்த்தெடுத்தார்.

சோவியத் ஒன்றியத்திற்கு பின்னடைவு ஏற்பட்ட போதிலும், சோவியத் ஒன்றியம் நடைமுறைப்படுத்திய பொது சுகாதாரத்துறை கட்டமைப்பு உள்ளிட்ட சோசலிசக் கட்டுமானம் என்ற வழிகாட்டுதல்தான் இன்றைக்கு சீனா உள்ளிட்ட சோசலிச நாடுகள் கொரோனா போன்ற பெருந்துயரத்தையும் எதிர்கொள்ளக்கூடிய வல்லமையை அளித்துக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையல்ல.

**முதலாளித்துவத்திடம் தீர்வு இல்லை**

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்கா உள்ளிட்ட முதலாளித்துவ நாடுகள் பின்பற்றிவரும் கொள்கைகளால் அவை எதிர்கொள்ளும் எந்தவொரு நெருக்கடிக்கும் வெற்றிகரமாக தீர்வுகாண முடியவில்லை. ஒரு நெருக்கடியிலிருந்து இன்னொரு நெருக்கடிக்கு அவர்கள் பயணப்படுகிறார்கள். இதன் விளைவாக மேலும் மேலும் லாபத்தை, மூலதனத்தைக் குவிப்பதற்காக உழைக்கும் வர்க்க மக்கள் மீதான சுரண்டலை மேலும் மேலும் தீவிரப்படுத்துகிறது முதலாளித்துவம். அனைத்தையும் தன் வசமாக்குவது என்ற ஏகாதிபத்திய கட்டத்தை நோக்கி முதலாளித்துவம் பயணப்படுகிறது. இதைத்தான் லெனின் தீர்க்கமாக வரையறை செய்து சொன்னார்.

இத்தகைய சுரண்டலுக்கு எதிராக உலகம் முழுவதிலும் இந்தியாவிலும் உழைப்பாளி வர்க்கம் வலுவான போராட்டத்தை நடத்தி வருகிறது. இன்றைக்கு நவீன தாராளமய கொள்கைகளின் கொடிய சுரண்டல் முறைக்கு எதிராக தீர்மானகரமான போராட்டத்தை உழைக்கும் மக்கள் நடத்தி வருகிறார்கள்.

**சோசலிசத்தை எட்டுவது எளிதானதா?**

இந்தப் போராட்டத்தின் இலக்கு, மனிதனை மனிதன் சுரண்டுகிற கொடூரமான முதலாளித்துவ சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை அடியோடு தகர்த்து சுரண்டலற்ற, வர்க்க பேதமற்ற சமூகத்தை - சாதி, மத வேறுபாடற்ற சமூகத்தை - பூமியிலேயே ஒரு பொன்னுலகை - படைக்கிற சோசலிசத்தை நோக்கி பயணிப்பது தான். ஆனால் இன்றைய முதலாளித்துவ உலகில் அந்தப் போராட்டம் அவ்வளவு எளிதானதா? என்ற கேள்வி பலருக்கும் உண்டு. அதற்கு தோழர் பிடல் காஸ்ட்ரோ பதிலளிக்கிறார் :

1998ஆம் ஆண்டு வெனிசுலாவில் முதன் முறையாக தோழர் சாவேஸ் மகத்தான வெற்றிபெற்று பதவியேற்றார். பதவியேற்பு விழாவிற்கு கியூபாவின் புரட்சித் தலைவர் தோழர் பிடல் காஸ்ட்ரோ சென்றிருந்தார். அங்கு அவர் உரையாற்றும்போது, சோசலிசத்தை கட்டமைப்பது என்பது எளிதானதல்ல. அதுபற்றி உழைப்பாளி மக்களுக்கு - தொழிலாளி வர்க்க மக்களுக்கு நுட்பமாக கற்றுத் தர வேண்டியது அவசியம். அவர்களுக்கு வர்க்க உணர்வை ஊட்டி வலுப்படுத்துவதன் மூலம் அந்த இலக்கை எட்டும் பயணத்தை முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட பிடல் காஸ்ட்ரோ தனக்கு நேர்ந்த அனுபவங்களை சுவாரசியமான முறையில் குறிப்பிட்டார்: “நான் கியூபாவில் புரட்சிக்குப் பிறகு ஒரு கிராமத்திற்குச் சென்றேன்.

மக்களைச் சந்தித்தேன். இங்கே இருக்கக்கூடிய நிலங்கள், கரும்பு வயல்கள் எல்லாம் முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கிறது, அதை நாம் மக்களுக்கு எடுத்துக் கொள்ளலாமா என்று கேட்டேன். உடனே எடுத்துக் கொள்ளலாம் என்றார்கள். ஹவானாவில் சில அடுக்குமாடி கட்டிடங்கள் அமெரிக்க முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கிறது, அவற்றைக் கைப்பற்றி தொழிலாளிகளுக்கு குடியிருப்புகளாக கொடுத்துவிடலாமா என்று கேட்டேன். ஆஹா, உடனே அளித்துவிடுங்கள் என்று சொன்னார்கள். காசு கொடுத்தால்தான் கல்வி, காசு கொடுத்தால்தான் மருத்துவம் என்ற நிலையை மாற்றி, அனைத்தையும் பொதுக் கல்வி, பொது சுகாதாரம் என மாற்றிவிடலாமா என்று கேட்டேன். நல்லது தலைவரே, உடனே செய்துவிடுங்கள் என்றார்கள். சரி, நமது நாட்டிற்கு சோசலிசத்தை கொண்டுவந்துவிடலாமா என்று கேட்டேன், அய்யோ அதை மட்டும் கொண்டுவந்துவிடாதீர்கள் என்று சொன்னார்கள். அந்தளவிற்கு சோசலிசம் மீது முதலாளித்துவ ஊடகங்களும் பிரச்சாரங்களும் உலக மக்களிடையே வெறுப்புணர்வை விதைத்து வைத்திருக்கின்றன. எனவே உலக மக்களின் வாழ்வு மலர உண்மையான ஒரே தீர்வு எல்லோருக்கும் எல்லாமும் பொதுவாக்குகிற சோசலிசம்தான் என்ற சிந்தனையை வலுவாகக் கொண்டு செல்ல வேண்டியது அவசியம்” என்று பிடல் காஸ்ட்ரோ கூறினார்.

2008ல் ஏற்பட்ட உலகளாவிய நிதி நெருக்கடியிலிருந்து ஏகாதிபத்தியம் இன்னும் மீண்டுவரவில்லை. வளர்ச்சி பெருமளவு குன்றி உள்ளது. பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளின் நலன்களை காப்பாற்றுவதில்தான் முதலாளித்துவ அரசுகள் தீவிரமாக உள்ளன. இதன் விளைவு உலகம் முழுவதும் பல நாடுகளில் பொதுசுகாதாரம் திவால் நிலைமைக்கு சென்றுவிட்டது. நவீன தாராளமய கொள்கைகளின் தீவிர அமலாக்கம் காரணமாக மக்கள் நலன் கைவிடப்பட்டுவிட்டது.

அதனால்தான் இன்றைக்கு முதலாளித்துவ அரசுகள் கொரோனா நெருக்கடியை எதிர்கொள்ளத் திணறி வருகின்றன. ஆனால் இந்த நெருக்கடியை உறுதியோடு, சரியான திட்டமிட்டலோடு, மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிர்கொண்டு வருகிற சோசலிச நாடுகள் மீதும் அவை பின்பற்றி வரும் மார்க்சியத் தத்துவத்தின் மீதும் உலக மக்களின் பார்வை திரும்பியுள்ளது. இத்தகைய சிந்தனைக்கு அடிப்படையானது மார்க்சியத் தத்துவத்தை கூர்மைப்படுத்தி நடைமுறையில் செயல்படுத்திக் காட்டிய மாமேதை லெனின் ஆற்றிய மகத்தான பணியே. அந்த அடிப்படையில் இன்றும் என்றென்றும் உலக மக்கள் மனங்களில் யுகமாகி நிற்கிறார் லெனின்.

---

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

வேண்டிய முக்கியமான விடயம் ஒன்றுள்ளது.

அந்த விடயம் என்னவென்றால், தமிழ் பிரதேசங்களில் அரசு சாரா பொருளாதாரத் திட்டங்களை, அதாவது இயந்திரவியல் கைத்தொழில்களை, விவசாயம் சார்ந்த கைத்தொழில்களை, கடற்றொழில் சார்ந்த தொழில்களை உருவாக்கி பொருளாதார பலத்தைப் பெருக்க வேண்டும். இதற்கான முதலீட்டுப் பலம் புலம்பெயர் தமிழர்களிடம் நிறைய உண்டு. ஆனால் அவர்கள் இதில் அக்கறை செலுத்துவதில்லை. அவர்களது அக்கறையெல்லாம் தாயகத்தில் காணி வாங்குவது. வீடு கட்டுவது, டாம்பீகமாக கலியாணங்கள், சாமர்த்திய சடங்குகள், கோயில் திருவிழாக்கள் செய்வதிலேயே இருக்கிறது.

தமிழ் மக்களின் யதார்த்தமான சமூக – பொருளாதார – அரசியல் நிலைமைகளைக் கணக்கில் எடுக்காத காரணத்தால்தான் 70 வருடங்களாக அகிம்சை வழிப் போராட்டங்களும், ஆயுத வழிப் போராட்டங்களும் தொடர்ந்து தோல்வியைத் தழுவி வந்திருக்கின்றன என்பதை எப்போதுதான் உணர்வார்களோ?

**முன்பக்கத் தொடர்ச்சி...**

ஆனால் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும், அவரது தலைமையிலான காபந்து அரசாங்கம் முழுமூச்சாக கொரோனாவைக் கட்டுப்படுத்தும் செயலில் இறங்கியது. சகல அரச ஊழியர்களும், முப்படையினரும், அரச வளங்களும் அந்த செயல்பாட்டிற்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டனர். அதன் காரணமாக மிகவும் வளர்ச்சி அடைந்த மேற்கு நாடுகளை விடவும் சின்னஞ்சிறிய இலங்கை இந்த கொடிய நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றியை நிலைநாட்டியது.

இலங்கையின் இந்த சாதனையை பல உலக நாடுகளும், உலக சுகாதார அமைப்பும் கூட பாராட்டத் தவறவில்லை. ஒரு கட்டத்தில் அரசின் முயற்சியை முன்னைய அரசாங்கத்தின் சபாநாயகர் கரு ஜெயசூரியவும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கூடப் பாராட்டினர். அதுமட்டுமின்றி, கோத்தபாய ராஜபக்ச அரசாங்கம் கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொண்ட முயற்சிகளை அனைத்து இலங்கை மக்களும் இன வேறுபாடு இன்றிப் பாராட்டியதுடன், அரசின் முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பும் வழங்கினர்.

ஆனால் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிர்க்கட்சியினர் எந்தவிதமான ஆக்கபூர்வமான பங்களிப்புகளும் வழங்கவில்லை. வேடிக்கை பார்ப்பவர்களாக மட்டுமே இருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் தேர்தல் ஆணையம் மீண்டும் கூடி நிலைமையை ஆராய்ந்ததுடன், முன்னைய திகதியை மாற்றி யூன் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது எனத் தீர்மானித்தது. இப்படியான ஒரு தீர்மானத்தை தேர்தல் ஆணையம் எடுத்ததிற்குக் காரணம், முன்னர் தீர்மானித்த திகதியில் தேர்தல் நடத்த முடியவில்லை என்றால் இன்னொரு திகதியை அறிவிக்க வேண்டும் என்ற சட்ட விதி காரணமாகவே என அரசியலமைப்பு நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் எதிர்க்கட்சியினரின் ராகம் மாறத் தொடங்கியது. முன்னர் அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் சர்வாதிகார ஆட்சி நடத்த முற்படுகிறது எனக் கூச்சல் போட்டவர்கள், இப்பொழுது அரசாங்கம் கொரோனா நோய்க்கு மத்தியில் தேர்தலை நடத்தி அரசியல் ஆதாயம் (தேர்தல் வெற்றி) பெற முயற்சிக்கிறது என ஒப்பாரி வைக்க ஆரம்பித்துள்ளனர். அதனால் தேர்தலை கால வரையறையின்றி ஒத்தி வைக்கும்படி தேர்தல் ஆணையத்திடம் இறைஞ்ச ஆரம்பித்துள்ளனர்.

இதற்குக் காரணம் மக்கள் மீதும் நாட்டின் மீதும் உள்ள பற்றுதல் அல்ல. தேர்தல் நடந்தால் தாம் முன்னர் எதிர்பார்த்ததிலும் பார்க்க மோசமாகத் தோல்வி அடைந்து விடுவோம் என்ற பயம்தான். ஏனெனில், கொரோனா நோய் ஏற்படுவதற்கு முன்னர் இருந்த நிலவரப்படி தேர்தல் ஒன்று நடந்தால் கோத்தபாயவின் அரசாங்கம் நிச்சயம் வெற்றியீட்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா என்ற சந்தேகமும் இருந்தது.

ஆனால் கோத்தபாய அரசாங்கம் கொரோனாவை கையாண்ட முறை காரணமாக நாட்டு மக்கள் மத்தியில் இப்பொழுது அது பெரும் செல்வாக்கைப் பெற்றுவிட்டது. அதன் காரணமாக இன்றைய சூழ்நிலையிலோ அல்லது கொரோனா முழுமையாகக் கட்டுப்பாட்டில் வந்த பின்னரோ, எப்பொழுது தேர்தல் நடந்தாலும் கோத்தபாய அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவது நிச்சயம் என்ற நிலை உருவாகிவிட்டது. அதனால்தான் பொதுத் தேர்தலைக் கால வரையின்றி ஒத்தி வைக்கும்படி எதிர்க்கட்சியினர் அடம் பிடிக்கின்றனர்.

அவர்களது வேண்டுகோளில் ஒரு முக்கியமான விடயத்தை அவதானிக்க வேண்டும். அதாவது, கொரொனா நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் தேர்தலை நடத்துங்கள் என அவர்கள் கோரவில்லை. தேர்தலை கால வரையின்றி ஒத்தி வைக்கும்படியே கோருகின்றனர். அப்படியானால் இனிமேல் தேர்தலே வேண்டாமா?

உண்மை என்னவெனில், இனி எப்பொழுது தேர்தல் நடந்தாலும் அரசாங்கக் கட்சிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைப்பது நிச்சயம் என்பது எதிர்க்கட்சியினருக்குப் புரிந்துவிட்டது. அப்படி அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமாயின் அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பு கொண்டு வருவது உட்பட தனக்குத் தேவையான அனைத்தையும் செய்ய முடியும். அப்படி நடந்தால் அது எதிர்க்கட்சிகளுக்கு சாவுமணி அடித்ததாக முடிந்துவிடும். அதைவிட தேர்தல் நடவாமல் இருந்தாலும் பரவாயில்லை எனக் கருதுகின்றனர் போலும்.

அதற்குப் பதிலாக கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி அவர்கள் கோருவதும் விடயத்தோடுதான். அது என்னவெனில், மகிந்த ராஜபக்ச தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடையாது. இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் நாடாளுமன்றத்தைக் கூட்டி ஏதாவது ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முயன்றால் எதிர்க்கட்சிகளால் அதைச் சுலபமாகத் தோற்கடிக்க முடியும். அதை வைத்துக்கொண்டு அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரலாம். அதன் மூலம் ஜனாதிபதி கோத்தபாய அரசாங்கம் ஒன்று இல்லாமல் ஆட்சியைத் தொடரவேண்டி இருக்கும்.

அப்படி ஒரு அரசாங்கம் இல்லாத நிலை உருவானால் நாட்டில் குழப்பம் தோன்றி அரசியல் ஸ்திரம் அற்ற நிலை உருவாகும். அது அராஜகத்துக்கும் அந்நியத் தலையீட்டுக்கும் இட்டுச் செல்லும். இந்த நிலையை எதிர்பார்த்தே எதிர்க்கட்சியினர் காய்களை நகர்த்தி வருகின்றனர். ஆனால் அவர்களது கனவு பொரிமாத்தோண்டியின் கதையாக முடிவது நிச்சயம்.

உலகில் வல்லவனுக்கும் ஒரு வல்லவன் இருப்பான் என்பதை சில பேராசை பிடித்த மனிதர்கள் மறந்து விடுகின்றனர்.

## சபாரத்தினம் மாஸ்ரர் மறைந்தார்

**ஊ**ர்காவற்றுறை கரம்பனைப் பிறப்பிடமாகக்கொண்ட மூதறிஞர், ஆ.சபாரத்தினம் ஆசிரியர் (காவல் நகரோன்) மே மாதம் 1ந் திகதி இறந்தார். இவருக்கு 91 வயது. 1949 – 1950 ஆம் ஆண்டுகளில், மஹரகம ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற இவர், 33 ஆண்டுகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் 5 ஆண்டுகள் கரம்பன் சண்முகநாத வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றி 1988 இல் ஓய்வு பெற்றுள்ளார். ஆசிரியத் தொழில் மட்டுமன்றி, சிறந்த சமூக சேவையாளராகவும் தமிழ் கலை, இலக்கிய துறையிலும் ஈடுபட்ட இவர், காவலூர் இலக்கிய வட்டம் அமைப்பின் தலைவராகவும் இருந்தார். அன்னாருக்கு வானவில் அஞ்சலியைத் தெரிவிக்கின்றது.

# வியட்நாம் எவ்வாறு கொரோனா நோயைக் கட்டுப்படுத்தியது?

கியூபா, சீனா, கேரள மாநிலம் போன்ற கம்யூனிஸ்ட் கட்சிகளால் வழிநடத்தப்படும் நாடுகளில் பொது சுகாதாரத்துக்கும் பொது மக்களின் தேவைகளுக்கும் முன்னுரிமை அளிப்பதால் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றைவிட குறைவாகவே இருக்கின்றது.

சோசலிச வியட்நாம் குடியரசு கூட, உலகின் மற்றைய இடங்களை விட இந்தப் பிரச்சினைக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்துள்ளது. ஏறத்தாழ 100 மில்லியன் சனத்தொகை கொண்ட வியட்நாமில் ஏப்ரல் 06ஆம் திகதிய நிலவரப்படி 245 பேருக்கு மட்டுமே கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதுடன் யாரும் இறக்கவுமில்லை. (Worldometers.info/coronavirus/)

இடதுசாரி குழுவல்லாத உலகப் பொருளாதார அரங்கு (World Economic Forum) மார்ச் 30ஆம் திகதி வெளியிட்ட கட்டுரையொன்றில் சில விபரங்களை வெளியிட்டுள்ளது.

15 டொலர் மட்டுமேயான செலவில் மிகவும் விரைவாக ஒரு மணித்தியாலத்தில் முடிவுகளைத் தரக்கூடிய சோதனைக் கருவியொன்றை (Test Kit) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான வியட்நாமிய பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது. இந்தக் கருவியை பல்லாயிரக்கணக்கில் பெறுவதற்கு 20 வரையிலான நாடுகள் வேண்டுகோள்களை அனுப்பியுள்ளன.

அதேநேரத்தில் இந்த கொரோனா வைரசை மருத்துவ முறைகள் அல்லாத வழியில் கட்டுப்படுத்தும் முறைகளிலும் வியட்நாம் கவனம் செலுத்தி வருகிறது. பெப்ருவரி 01ஆம் திகதியிலிருந்து சீனாவுக்கான சகல விமான சேவைகளையும் இரத்துச் செய்துள்ளதுடன், லுனார் புது வருடத்தின் பின்புவரை பாடசாலைகளை மூடி வைக்கவும் முடிவு செய்துள்ளது. அத்துடன் கொரோனா வைரஸ் முதன்முதல் பரவிய சீனாவின் வூஹான் மாகாணத்தில் பணிபுரியும் பலரைக் கொண்ட தலைநகர் ஹனோய்க்கு வடக்கேயுள்ள வின் பூ மாகாணத்தை 21 நாள் தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தியது.

வியட்நாமுக்குள் வரும் ஒவ்வொருவரையும் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கியதுடன், எல்லா வெளிநாட்டு விமான சேவைகளையும் இரத்துச் செய்தது. தனிமைப்படுத்தும் நிலையங்கள் நகரங்களின் எல்லைப்புறங்களில் அமைக்கப்பட்டதுடன், வெளிநாட்டு விருந்தினர் உட்பட அங்கு தங்க வைக்கப்பட்ட சகலருக்கும் 100 வீதம் மருத்துவ கவனிப்பு, உணவு, தங்குமிட வசதி என்பன அளிக்கப்பட்டன.

சன் ரே என்ற இடத்திலுள்ள தனிமைப்படுத்தும் நிலையத்தில் தங்கியிருந்த ஒரு பிரித்தானியப் பிரஜை தனது அனுபவத்தை பின்வருமாறு விபரித்தார்:

“எல்லாமே சடுதியாக மிகவும் மனிதத்தன்மையுள்ளதாக மாறியது. ஒரு நாடு என்ற வகையில் அவர்கள் சிறந்த முறையில் தம்மைப் பாதுகாத்தது மட்டுமின்றி, விருந்தாளிகளான எம்மையும் அதே வகையில் பாதுகாத்தார்கள். அதுதான் வியட்நாமின் இயற்கையான நல்ல தன்மை. வெளியில் எல்லாமே அமைதியாக இருந்தன. நாம் தங்கியிருந்த இடமும் அமைதியாக இருந்ததுடன், படையினர் ஓய்வு ஒழிச்சல் இன்றி தினசரி அறைகளை தொற்று நீக்கம் செய்வதிலும், எமது உடல் வெப்ப நிலையைக் குறிப்பதிலும், குப்பைகளை அகற்றுவதிலும் ஈடுபட்டனர். சொல்லப்போனால் இந்தத் தனிமைப்படுத்தும் நிலையம் ஒரு விடுமுறை முகாமின் தன்மையை எமக்கு ஏற்படுத்தியது எனலாம். எமது அறையில் நாம் சிற்றுண்டிகளையும், பழங்களையும் பங்கிட்டு உண்டதுடன், வெளியிலுள்ள எமக்கு விருப்பமானவர்களிடமிருந்து அன்பளிப்புகளையும் பெற ஆரம்பித்தோம்” (VNExpress International, March 17)

இந்த தனிமைப்படுத்தல் முகாம்களில் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளாதவர்களும் இருந்தனர். அயலில் எங்காவது நோய்த் தொற்று காணப்பட்டால் அந்தப் பகுதியிலுள்ள வீதிகள் அனைத்தும் தொற்று நீக்கம் செய்யப்படுவதுடன், அந்தப் பகுதி மக்கள் அனைவரும் இருவார காலம் தனிமைப்படுத்தப்படுவதுடன், அவர்களுக்கு இலவசமாக சுத்தமான உணவு மற்றும் மருத்துவக் கவனிப்பு என்பனவும் வழங்கப்படுகிறது.

வியட்நாமுக்கு மார்ச் 5 முதல் 17 வரை பயணம் மேற்கொண்ட உலகத் தொழிலாளர் கட்சியின் (Workers World Party) உறுப்பினரான Susan Schnur கூறுகையில், வியட்நாமிய விமான நிலையங்களில் பரிசோதனைகள் அமெரிக்காவை விட கூடுதலாகவும் கண்டிப்பான முறையிலும் மேற்கொள்ளப்படுவதாகவும், கைகளைச் சுத்தம் செய்யும் கிருமி அகற்றும் திரவம் கிராமப்புறங்கள் உட்பட எங்கும் வைக்கப்பட்டுள்ளதாகவும், கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மக்கள் “மிகவும் மகிழ்ச்சி” அடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கப் போரிடுவதில் வியட்நாம் சமூக ஊடகங்களையும் தகவல் தொழில்நுட்பத்தையும் கூட நன்கு பயன்படுத்துகிறது. வியட்நாமிய மக்கள் தொகையில் 90 வீதமானோர் நவீன கைத்தொலைபேசி வைத்திருக்கின்றனர். இந்த ஊடகங்கள் மூலம் அரசாங்கம் புதிதாக நோய் பரவியுள்ள பிரதேசங்கள், சிகிச்சை முறைகள் போன்ற விடயங்களை மக்களுக்கு உடனுக்குடன் தெரிவித்து வருகின்றது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக எப்படி சரியான முறையில் கைகளைக் கழுவுவது என்பதைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்காக இலகுவில் விளங்கக்கூடிய இசை வீடியோ ஒன்றை வியட்நாமிய சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

2002 முதல் 2018 வரையான காலகட்டத்தில் 45 மில்லியன் வியட்நாமிய மக்கள் வறுமைக்கோட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 1990இல் இருந்து 2015 வரையான காலகட்டத்தில் மக்களின் சராசரி ஆயுள் 71 வருடங்களில் இருந்து 76 வருடங்களாக அதிகரித்துள்ளது. அமெரிக்காவில் உள்ளதை விட அதிகரித்த வீதத்திலும் செலவு குறைவாகவும் வியட்நாமின் நோய்த் தடுப்பூசி முறை இருப்பதுடன், பின் தங்கிய பகுதிகளுக்கும் சிறுபான்மை இனங்கள் வாழும் பகுதிகளுக்கும் இலவசமாகவும் வழங்கப்படுகிறது.

கொரோனா வைரசைக் கட்டுப்படுத்துவதில் வியட்நாம் வளர்ச்சி அடைந்த மற்றும் பணக்கார நாடுகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

(இந்தக் கட்டுரை worker's World என்ற பத்திரிகையில் Joshua Hanks என்பவர் ஏப்ரல் 08, 2020இல் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளாகும்)